Registered as a Newspaper

பக்கங்கள் 6

விலை ரூபா 5·00

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | கார்த்திகை 01 | 17-11-94 | வியாழக்கிழமை | ஓசை 272

## மிதமிஞ்சிய உப்பின் பாவனை மனித உடல் நலத்திற்கு தீங்கு

மரக்கறி, மற்றும் உணவுப் பொருட்கள் மூலம் கிடைக்கும் உப்பே மனித தேவைக்கு போதுமானதாக இருக்கும்போது, தேவைக்கதிகமாக உணவுப் பண்டங்களின் சுவையைக் கூட்டும் பெயரில் உப்பினை உள்ளெடுத்துக் கொள்வதாக மருத்துவ ஆய்வொன்று தெரிவித்துள்ளது. மனித சராசரி தேவையை விட நான்கு மடங்குக்கு அதிகமான சோடியம் குளோரைட்டை (கறியுப்பு) ஒவ்வொருவரும் தினமும் உட்கொள்வதாகவும், அதிகமாக உடலில் சேரும் உப்பு உடலுறுப்புகளுக்கு (6-ம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்காவில் 20 பேர் அதிகாரிகளால் கைது

(கொழும்பு)

பொய்த் தகவல்களை கொடுத்து விமான நிலையத்தின் ஊடாக நாட்டிலிருந்து வெளியேற முயன்ற இருபது பேர் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு தலா 4500 ரூபா வீதம் 90,000 ரூபாவை அபராதமாக கட்டும்படி கொழும்பு மாவட்ட மாஜிஸ்திரேட் நீதிவான் உத்தரவு பிறப்பித்தார். கொழும்பிலிருந்து பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி மற்றும் மத்திய கிழக்கு போன்ற நாடுகளுக்கு வெளியேறிச் செல்ல இவர்கள் திட்டமிட்டிருந்தனர். இவர்களில் ஐந்து பேர் யுவதிகளாவர். விசாரணையின் போது இவர்கள் குற்றத்தை ஏற்றுக் கொண்டனர்

# சமாதான பேச்சுவார்த்தைகள் விரைவில்மீண்டும்ஆரம்பமாகும்

## திகதி குறித்து இன்னும் முடிவில்லை

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இருப்பினும், பேச்சுவார்த்தையில் ஈடுபடும் அரசாங்கத் தரப்புக் குழுவினர் யாழ்ப்பாணம் செல்லும் திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் அறியவருகின்றது.

இது குறித்து நேற்று அமைச்சரவை தீர்மானங்கள் அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் பேசிய அமைச்சரவைப் பேச்சாளரான தர்மசிறி சேனநாயக்கா சமாதான முயற்சிகளை அரசாங்கம் விரைவில் ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ள போதிலும் அரசாங்கத் தரப்புக் குழுவினர் யாழ்ப்பாணம் செல்வதற்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

மேலும் அவர் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒருதலைப் பட்சமாக பிரகடனப்படுத்தியுள்ள யுத்தநிறுத்தம் பற்றி அரசாங்கத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை எனவும், ஆயினும் நிலவரத்தை உணர்ந்துள்ள அரசு சமாதானப் பேச்சுக்களை விரைவில் மீள ஆரம்பிக்க ஆர்வம் கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்,

மேலும் விடுதலைப் புலிகள் 6 ஆம் பக்கம் பார்க்க

## டோரா படகிலிருந்து தாக்குதல் ஒரு மீனவரைக் காணவில்லை

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை கடற் பகுதியில் நடந்த சிறிலங்கா கடற்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தையடுத்து கடலில் தொழில் செய்த ஒரு மீனவரைக் காணவில்லை. இவருடன் சென்ற மற்றைய மீனவர் கரைக்கு வந்துசேர்ந்தார்.

வெற்றிலைக்கேணியில் இருந்து காங்கேசன்துறை நோக்கி 'டோறா' படகில் நேற்றுக் காலை 6-00 மணியளவில் கடற்படையினர் ரோந்து சென்றபோதுஇச்சம்பவம் நிகழ்ந்தது-

வல்வெட்டித்துறை கடற் பரப்பில் சிறிலங்கா கடற் படையினர் சரமாரியாக சுட்டதையடுத்து ஆதிகோவிலடியைச் சேர்ந்த ஏழு பிள்ளைகளின் தந்தையான சக்திவேல் [50] என்பவரைக் காணவில்லை. இவருக்கு என்ன நடந்தது என்பதுபற்றி தெரியவில்லை. இவருடன் தொழிலுக்குச் சென்ற அதே இடத்தைச் சேர்ந்த துரைச்சாமி - சிவசோதி (27) என்பவர் கடலில் குதித்து நீந்திக் கரைக்கு வந்து சேர்ந்தார். இவர்களது கட்டுமரமும் சேதமடைந்தது. வலை மற்றும் பொருள்களும் நாசமடைந்தன. (யோ)

## பலியானவர் இராணுவ மேஜர்

(கொழும்பு)

கடந்த ஒன்பதாம் திகதி வெற்றிலைக்கேணி காவலரண்கள் மீது விடுதலைப் புலிகளின் மகளிர் அணியினர் நடத்திய தாக்குதலில் பலியான இராணுவ அதிகாரி மேஜர் சீவலி மஞ்சுல ராஜபக்ஸ என அறிவிக்கப்படுகின்றது

6 ஆம் பக்கம் பார்க்க

## பீரங்கிப் படகுகள் கரையோரம் மீது தாக்கு

நேற்றுக் காலை அரிப்பு கடற்பரப்பில் நின்ற இரண்டு சிறிலங்கா கடற்படையின் பீரங்கிப் படகுகள் மக்கள் குடியிருப்புக்கள் மீது தாக்குதலை நடாத்தின-

கடற்கரையிலிருந்து சுமார் 150 யார் தொலைவில் வைத்து நடத்தப்பட்ட இத் தாக்குதலில் பல வீடுகள் சேதமடைந்ததுடன் கால்நடைகளும் பாதிப்படைந்தன

## ஒலிக்குப் பதில் தேவராஜ் தெரிவு

[கொழும்பு]

சிறிலங்கா மக்கள் கட்சியின் தலைவர் ஒஸி அபயகுணசேகரா மறைந்ததைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள பாராளுமன்ற வெற்றிடத்திற்கு இ.தொ.கா.வின் முக்கிய பிரமுகரும், இந்து கலாசாரத் துறையின் முன்னாள் அமைச்சருமான பி. பீ. தேவராஜ் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதனை தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## பிரதி அமைச்சர் நியமனம் இல்லை

முன்னர் எதிர்பார்க்கப்பட்டதைப்போன்று நேற்று பிரதி அமைச்சர்கள் பதவிப்பிரமாணம் நடைபெறவில்லை. பிரதி அமைச்சர்களின் நியமனம் குறித்து இரண்டு நாட்களில் முடிவு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மட்டக்களப்பில் இரு புலிகள் ராணுவத்தால் சுட்டுக்கொலை

### பி. பி. ஸி அறிவிப்பு

விடுதலைப்புலிகள் தாமாக முன்வந்து யுத்த நிறுத்தம் அறிவித்திருந்த போதிலும் மட்டக்களப்புமாவட்டத்தில்நேற்று முன்தினம் இரு விடுதலைப் புலிப் போராளிகள் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள்காட்டி பி.பி.ஸி. தெரிவித்தது.

இதே வேளை புலிகள் ஏன் இந்த ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவித்திருக்கின்றனர் என்பது விளங்கவில்லை என இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ்செல்லும் அரச குழுவில் சில மாற்றங்கள் நிகழலாம்

### குழுத் தலைவரில் மாற்றம் இராது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் இரண்டாம் கட்ட சமாதான பேச்சுக்களை தொடர்வதற்காக செல்லவுள்ள அரசதரப்பு பிரதிநிதிகள் குழுவில் சில மாற்றங்கள் இருக்கலாம் என நம்பப்படுவதாக ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. எனினும் குழுவிற்கு இம்முறையும் ஜனாதிபதியின் செயலராக தற்போதுள்ள கே. பலபத்தபெண்டியே தலைமைதாங்குவார் என்றும் அப்பத்திரிகை கூறுகிறது.

இதுகுறித்து மேலும் தகவல் வெளியிட்டுள்ள ஐலண்ட் பத்திரிகை, அரசு விரைவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக விடுதலைப் புலிகளின் உயர் பீடத்துடன் தொடர்புகொள்ள திட்டமிட்டுள்ளது.

இதேசமயம் பேச்சுகள் மீள ஆரம்பிப்பது குறித்து அரசு முப்படை தளபதிகளுக்கு 6 ஆம் பக்கம் பார்க்க

# 10 தொன் எடை ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளின் கப்பல்

## தடுத்து நிறுத்த இந்தியாவிடம் சிறிலங்கா கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு, அடையாளம் தெரியாத பிறநாட்டின் துறைமுகம் ஒன்றிலிருந்து சுமார் பத்துதொன் அளவு போராயுதங்கள் கப்பலில் வந்து கொண்டிருக்கிறது என்றும், இதனை வழிமறித்துப் பிடிக்க இந்தியா உட்பட அருகாமை நாடுகளின் உதவியை இலங்கை அரசு இரகசியமாக கோரியிருப்பதாக ஒப்சேர்வர் பத்திரிகை தெரிவித்துள்ளது.

அது மேலும் தெரிவிக்கையில், குறிப்பாக இது தொடர்பான உதவியை இந்தியாவிடம் சிறிலங்கா கோரியுள்ளது இச்செய்தியில் உண்மையுள்ளது என இராணுவ தரப்பும் ஒப்புக்கொண்டுள்ளது.

## அரசியலமைப்பு மாற்றம் குறித்து ஐ.தே.க முடிவு செய்யவில்லை

### புதிய தலைவர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் திருமதி சந்திரிகா குமாரதுங்கா வெற்றி பெற்றாலும் அரசியலமைப்பை மாற்றுவதற்கு சர்வசன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட்டே ஆகவேண்டும் அவ்வாறில்லாமல் அரசியலமைப்பை மாற்ற முனைவது சட்டவிரோதமான செயலாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், அரசியலமைப்பை மாற்றுவதுகுறித்து சர்வசன வாக்கெடுப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு பற்றியோ அரசியலமைப்பை மாற்றுவதற்காக பாராளுமன்றத்தின்மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு நிலை குறித்தோ எதுவித முடிவும்எடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தங்கள் வாழ்வைவிட பிறந்த மண்ணை ஆழமாக நேசித்த மாவீரர்கள்

### விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு

[யாழ்ப்பாணம்]

மாவீரர்கள் தாங்கள் பிறந்த மண்ணை ஆழமாக நேசித்தார்கள், தங்களின் வாழ்வைவிட மக்களின் வாழ்வை பெரிதாக மதித்தார்கள், தன்மானத்துடன் எமது தாய்மொழியான தமிழைப் பாதுகாக்கப் புறப்பட்டார்கள். இவர்களின் செங்குருதியினால் இந்த மண் சிவந்தது விடுதலைப் புரட்சி இந்த மண்ணில் சுடர்விட்டு எழுந்தது.

இவ்வாறு மாவீரர் நாள் தொடர்பாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பால் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடுகையில்; இழந்த எமது தாய் நாட்டின் விடுதலைக்காக தங்கள் இன்னுயிரை ஈந்து இந்த மண்ணிற்கே உரமாகிப் போன உத்தமர்கள் தான் இந்த மாவீரர்கள்.

எமது மக்களுக்காகவும் அவர்களின் சுபீட்சமான வாழ்விற்காகவும், எமது எதிர்காலச் சந்ததி இந்த மண்ணில் தலை நிமிர்ந்து உரிமையுடன் வாழ வேண்டுமென்பதற்காகவும், தங்களை முழுமையாக அர்ப்பணித்துப் போராடியவர்கள் தான் மாவீரர்கள்;

எமது நீண்ட வரலாற்றை நிலைநிறுத்த நடைபெறுகின்ற வரலாற்றுப் போரை வரலாற்று நாயகனான எமது தேசியத் தலைவர் மேதகு திரு. வே. பிரபாகரன் அவர்கள் வழிநடத்திச் செல்கின் 6 ஆம் பக்கம் பார்க்க

## தாக்குதல் நிறுத்தம் குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பை எதிர்பார்த்துள்ளனராம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நிறுத்தத்தை ஒரு வார காலத்துக்கு அமுலாக்கியிருப்பது குறித்து எங்களுக்கு தகவல் கிடைத்திருக்கிறது. எனினும் விடுதலைப் புலிகளிடமிருந்து உத்தியோக பூர்வ அறிவிப்பை எதிர்பார்க்கின்றோம் என அரசாங்கத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வணசிங்க தெரிவிக்கையில், புலிகள் தாக்குதலை நடத்த மாட்டார்கள் என்றால் அது ஒரு நல்லவிஷயம் ஆனால் பாதுகாப்பு படையினர் தமது காவல் கடமையை குறைக்க முடியாது எனக் கூறியுள்ளார்;

## காமினி கொலை விசாரணை புலனாய்வாளரை அனுப்ப இந்தியா இணக்கம்

(கொழும்பு)

காமினி திசாநாயக்கா கொலை குறித்து புலன்விசாரணை செய்ய இரு இந்திய புலனாய்வாளர்களை அனுப்புவதற்கு இந்திய அரசுஇணங்கியபோதும் இதுவரை அவர்கள் பற்றிய விபரம் இந்திய அரசால் வெளியிடப்படவில்லை என நீதியமைச்சர் ஜி எல். பீரிஸ் நேற்று தெரிவித்தார்,

இதேவேளை மூன்று அமைச்சர்கள் விசாரணைக் குழுவின் விசாரணை முடியும் ( 6 ஆம் பக்கம் பார்க்க )

## பிரதமரின் செயலாளராக ஹேமசிறி நியமனம்

[கொழும்பு]

பிரதமர் சிறிமா பண்டாரநாயக்காவின் புதிய செயலாளராக சிறிலங்கா டெலிகொம் நிறுவனத்தின் தலைவரான ஹேமசிறி பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சிறிலங்கா கடற்படையின் தொண்டர் படைப்பிரிவின் ஆணைபெற்ற அதிகாரியாகக் கடமையாற்றுவதும் குறிப்பிடத்தக்கது.

# வரி விளம்பரம்

## A/L பௌதிகவியல் 95/96

தனிப்பட்ட முறையில், சிறு குழுவாக பௌதிகவியல் தூய கணிதம், பிரயோக கணிதம் சிறப்பாக பல வருடம் அனுபவம் பெற்ற ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளோடு கற்பிக்கப்படும். R பாலசுப்பிரமணியம் B Sc Cey Dip in Ed, 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (10098)

## சங்கிராந்தி பூசை

(கொழும்புத்துறை)

பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில் சங்கிராந்தி பூசை இன்று காலை விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாட்டுடன் நடைபெறும் (24)

## பிள்ளையார் கதைப் படிப்பு

கோப்பாய் வடக்கு இலுப்பையடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை கார்த்திகை 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை எட்டு மணிக்கு பஞ்சமுக விநாயகருக்கு ஸ்நபன அபிசேகத்துடன் பிள்ளையார் கதைப் படிப்பும் விசேட பூசையும் இலட்சார்ச்சனையும் நடைபெறும். இக் கிரியைகளை சிவாகம கலாநிதி சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள் அவர்கள் செய்து வைப்பார்.

## கண்டெடுப்பு

நடராஜா அமிர்தலிங்கம் என்பவரது (பாஸ்போட்டுகள்) கடவுச்சீட்டுகள் இரண்டு வல்லைப் பாதையில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்,

## கற்பகச்சோலை திட்டத்தில் தனிநபர் பங்களிப்பு

கற்பகச் சோலை பனை நடுகைத் திட்டத்தின் கீழ் பொன்னாலையைச் சேர்ந்த திரு: கைலைநாதன் அவர்கள் தனது குடியிருப்புக் காணியில் 150 பனை விதைகளை நாட்டியுள்ளார். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியால் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் மேற்படி திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்த அந்நபர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியுடன் தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெற்று பனை விதை நடுகை செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சஞ்சிகை வெளியீடு

[யாழ்ப்பாணம்]

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைத் தலைமையகத்தினால் நடத்தப்பட்ட முதலுதவிப் பரீட்சையில் சித்தியெய்தியோருக்கான சான்றிதழ் வழங்கலும் யாழ். கிளையினால் வெளியிடப்படும் பத்தாவது சஞ்சிகையின் வெளியீடும் இன்று மு ப. 9 30 மணிக்கு நடைபெறும்.

## அலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் தீவகக் கோட்ட அரசியற் துறையினால் முன்னெடுக்கப்படும் மாவீரர் தின ஏற்பாட்டு நடவடிக்கைகளுக்கு துணை புரியவென கோயில் வீதியில் உள்ள மேற்படி கோட்ட அரசியற்துறை செயலகத்தில் விசேட செயலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. தினமும் பிற்பகல் 3 00 மணிதொடக்கம் 5 00 மணிவரை இயங்கும் இச் செயலகத்தில் இக் கோட்ட ரீதியாக மேற்கொள்ளப்படும் மாவீரர் வார நிகழ்வுகள், விழாக்கள், மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு உட்பட்ட அனைத்து செயற்பாடுகளுக்கும் பொறுப்பானவர்கள் மற்றும் தொண்டர்கள் தத்தமது தேவைகளையும் பிரச்சினைகளையும் எடுத்துக் கூற முடியும் என தீவகக் கோட்ட மாவீரர் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (22)

# தேர்தல் ரீதியான மோதல் முடிவுக்கு வந்துவிட்டது

- ஜே. ஆர். ஜெயவர்த்தனா

(கொழும்பு)

தேர்தல் ரீதியான மோதல் முடிவடைந்து விட்டது. நாகரீகமான ஜனநாயக ரீதியிலான மக்கள் என்ற வகையில் மக்களின் ஆணையை நாம் ஏற்று சமாதான நட்புறவு வாழ்வுக்கு திரும்புவது எமது கடமையாகும்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில், இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து இலங்கையில் ஜனநாயக ரீதியிலான தேர்தல்கள் நடைபெற்று வந்துள்ளன, தேர்தல்கள் முடிவுற்றதும் மோதல்களும் முடிவுற்று சமாதானம் நட்புறவு நல்லெண்ணம் ஆகியவற்றுடன் மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். அவ்விதமே இப்போதும் இருக்கட்டும் எனவும் குறிப்பிட்டார்.

# அந்தியேட்டிக் கிரியை நினைவு நாள்



தோற்றம் 13.07.1944

மறைவு 19.10 1994

## திரு. கதிரவேல் அம்பிகாபதி

சிரித்த முகம் சிந்தனை ததும்பும் விழிகள்
சிறந்தோனென மாநிலம் போற்றும் பண்பு
வரித்த நேர்மை வழுவா மாண்பு
வஞ்சமிலா நெஞ்சு கொண்ட வாரிதியே
விரிந்த விழிகள் சொரியும் கண்ணீர்
விண் சென்ற உம் பெயரை என்றும் கூறுமய்யா,

பூமாஞ் சோலை,
அல்வாய் மேற்கு.

மனைவி, பிள்ளைகள்
(9755)

# நினைவு கூருகின்றோம்...

## 17. 11. 1994

1987 ம் ஆண்டு இதேதினத்தில் கோண்டாவில் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் விழுப்புண்ணடைந்து மந்திகை மருத்துவ மனையில் வீரச்சாவெய்திய,

**சீலன்** (தங்கராசா பேபிசிங்கம் குணேஸ்- வேல் வீதி, மயிலிட்டி - யாழ்)

பண்டத்தரிப்பு - தொட்டிலடிப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சந்திரபாபு** (சலமோன் நிக்சன் -இந்திரபுரம் -பளை)

1988- ம் ஆண்டு கோண்டாவில் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-லெப். ஜோன்** [ஆரோக்கியம் குரூஸ் - நானாட்டான் - மன்னார்)

1989 -ம் ஆண்டு வட்டக்கச்சிப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**விஜய்** (யோகநாதன் ஞானசம்பந்தம் - இரத்தினபுரம் -கிளிநொச்சி]

தேசவிரோதிகளால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய,

★ **சவுரிமுத்து டேவிட்** (பெரியவிளான் - யாழ்)

★ **தாஸ்** (செபமாலை செல்வராசா -பெரியவிளான் - யாழ்)

யாழ் - மானிப்பாய் பகுதியில் இந்தியப்படையினரால் சுடடுக் கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளரான,

**செல்லத்தம்பி** [மானிப்பாய்]

1990 ம் ஆண்டு பலாலிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். றோய்** (தர்மராசா றோய் - நாவலப்பிட்டி)

திருமலை - திரியாய்ப் பகுதியில் முற்றுகையிட்ட சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் வாசு** [சண்முகலிங்கம் பாலேந்திரன் -சாம்பல்தீவு -திருமலை]

1993- ம் ஆண்டு பூநகரி - நாகதேவன்துறை இராணுவக் கடற்படைக் கூட்டுத்தளமீது "ஒப்பரேசன் தவளை" நடவடிக்கையின்போது விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய,

**கப்டன் தனம்** (பாலகிருஷ்ணன் நித்தியானந்தன் - தேசப்பிலவு, முள்ளியவளை -முல்லை]

**லெப். ஈழவேந்தன்-றிச்சாட்** [மகாலிங்கம் பஞ்சலிங்கம் - தர்மபுரம் - கிளிநொச்சி)

முல்லை மாவட்டத்தில் சிறிலங்கா விமானப்படையினரின் குண்டு வீச்சுத்தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். அறிவொளி / கரன்** [வைரமுத்து செங்காதரன் - பள்ளிக்குடியிருப்பு - திருமலை]

29. 9. 93 அன்று யாழ்தேவி நடவடிக்கையின் போது விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய,

**விமலநாதன்** (கணபதிப்பிள்ளை தேவராஜா - - வாழைச்சேனை - மட்டு)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொது மக்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்;

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-10724]

## இருவர் காயம்

யாழ். போதனா மருத்துவ மனையில் மருத்துவ உபகரணங்களை தொற்று நீக்கம் செய்யப் பயன்படும் ஓட்டோகிளைவ் சாதனத்தின் கழிவு நீர் செல்லும் கொதிநீர் குழிகள் வெடித்ததில் ஊழியர்கள் இருவர் காயமடைந்தனர்.

மேற்படி சாதனத்தின் மூலம் பொருள்களை தொற்று நீக்கம் செய்து கொண்டிருந்த போது நேற்று முன்தினம் மதியம் இச்சம்பவம்நடந்தது.

இதன்போது கொதிநீர்ஆவி தாக்கியதில் கந்தசாமி, பாலசுப்பிரமணியம் ஆகிய இரு ஊழியர்களும் எரிகாயங்களுக்கு இலக்கானார்கள்; (சி]

# பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு குறிப்பிட்ட தகைமை உடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 30-11-94-ம் திகதிக்கு முன்னதாக பொதுமுகாமையாளர், வலிகாமம் ப. தெ. வ. அ. கூ. சங்கங்களின் கொத்தணி, நடுவகப் பணியகம், மானிப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்;

1) **கணக்குப் பதிவாளர் மேற்பார்வைத்தரம் -10**

அ) கணக்குப் பதிவாளர்/எழுதுனர் பதவிகளில் கூட்டுறவுப் பணியாளர் 11வது சம்பளத்திட்டத்தில் 2 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம் அல்லது 12வது சம்பளத்திட்டத்தில் 4 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ) ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைத் தேர்வுடன் அங்கீகரிக்கப்பட்ட வாணிப/கைத்தொழில் நிறுவனம்- ஒன்றில் கணக்கீட்டில் 2 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம்

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உ/த) /க. பொ. த. (உ/த) த்தில் கணக்கியல் உட்பட 3 பாடங்களில் குறையாத சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வாணிப/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கீட்டில் 2 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம்.

சம்பளத் திட்ட இல -10
1045-40X4, 50×10-1705
வயது: - 21 - 40 வரை.

2) **தமிழ் தட்டெழுத்தாளர் தொழிற்படுதரம் -10**

அ) தட்டெழுத்தாளர் தரத்தில் கூட்டுறவுப் பணியாளர் 11வது சம்பளத்திட்டத்தில் 2 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம்.

ஆ) தமிழ்/சிங்கள மொழியுடன் க. பொ. த (சா/த) பரீட்சையில் 6 பாடங்களில் குறையாத சித்தியுடன் நிமிடம் ஒன்றுக்கு தமிழில் 25 சொற்கள் தட்டச்சிடும் வேகமுடைய 2 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம்.

சம்பளத் திட்ட இல: 10
1005 - 40X5, 50×10 - 1705
வயது:- 21 - 40 வரை.

**பொதுமுகாமையாளர்,
வலிகாமம் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,
நடுவகப் பணியகம் - மானிப்பாய்.**

(சி-10726)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை: மானிப்பாய்

# 1995 ஆம் ஆண்டு சந்தைகளுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு கொடுப்பதற்கான கேள்விகள் 1994-12-07 ஆம் திகதி காலை 10.00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்:

கேள்விப் பத்திரங்களை பிரதேச சபையின் உப அலுவலகங்களில் இதன் கீழ் உள்ள அட்டவணையில் தெரிவிக்கப்பட்டவாறு கேள்வி வைப்புப் பணத்தையும், மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணத்தையும் செலுத்துவதன் மூலம் 1994.12.06 ஆம் திகதி நண்பகல் 12 00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்களை இணைப் பிரதிகளில் தயாரித்து, மூலப்பிரதியை 'விசேட ஆணையாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்'' என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை ''உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம் யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் எழுதப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் 1994 - 12 - 07 ஆம் திகதி காலை 10 - 00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது குறித்த நேரத்திற்கு முன் வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையின் தலைமைப் பணியகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 1994-12-07 ஆம் திகதி காலை 11-00 மணிக்கு தலைமை அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும். அக்கருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்- கேள்விப் பத்திரங்கள் பெறுபவர்கள் தம்முடன் அடையாள அட்டையையும், குடும்ப அட்டையையும் தவறாது கொண்டு வருதல் வேண்டும்:

இது சம்பந்தமான மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும், உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

து. வைத்திலிங்கம்
விசேட ஆணையாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்;

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
தலைமைச் செயலகம்,
நகர மண்டபம்,
மானிப்பாய்,
1994-11-16

### அட்டவணை

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | கடையின் மாத வாடகை | கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | நிர்ணயிக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|---|---|
| மானிப்பாய் பட்டினம்: | | | | | |
| 1. | ஆட்டிறைச்சிக்கடை (சந்தை) | 250/- | 1000/- | 100/- | 27,610/- |
| 2, | மாட்டிறைச்சிக்கடை இல. (1) (சந்தை) | 250/- | 1000/- | 100/- | 55,050/- |
| 3. | மாட்டிறைச்சிக்கடை இல. (2) (சந்தை) | 250/- | 1000/- | 100/- | 55,050/- |
| 4. | மானிப்பாய் மத்திய சந்தை | - | 1000/- | 100/- | 66,110/- |
| 5. | கட்டுடை சந்தை | - | 300/- | 100/- | 500/- |
| மானிப்பாய் கிராமம்: | | | | | |
| 1. | சாவற்கட்டு சந்தை | - | 1000/- | 100/- | 2,420/- |
| 2. | ஆனைக்கோட்டை நவாலி பிரசாத் சந்தை | - | 1000/- | 100/- | 12,650/- |
| 3. | காக்கைதீவுச் சந்தை | - | 1000/- | 100/- | 3,300/- |
| 4. | மாட்டிறைச்சிக்கடை நவாலி பிரசாத் சந்தை | 250/- | 1000/- | 100/- | 46,750/- |
| 5. | ஆட்டிறைச்சிக்கடை நவாலி பிரசாத் சந்தை | 250/- | 1000/- | 100/- | 11,110/- |
| 6. | ஆட்டிறைச்சிக்கடை சாவற்கட்டுசந்தை | 250/- | 1000/- | 100/- | 11,000/- |
| 7. | கருவாட்டுக்கடை சாவற்கட்டு சந்தை | 100/- | 500/- | 100/- | 1,155/- |
| பண்டத்தரிப்பு கிராமம் | | | | | |
| 1. | மாசியப்பிட்டிசந்தை | - | 1000/- | 100/- | 12,100/- |
| 2. | மாசியப்பிட்டி மாட்டிறைச்சிக்கடை | 100/- | 1000/- | 100/- | 15,400/- |
| 3. | மாசியப்பிட்டி சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 100/- | 1000/- | 100/- | 10,000/- |

[சி-10727]

# யுத்தம் நிறுத்தப்பட்டால் பெருமளவு உதவிகிடைக்கும்

## ராவய பத்திரிகை தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கும் புனர் அமைப்பு வேலைகளுக்குமாக 200 கோடி அமெரிக்க டொலர்களை (பத்தாயிரம் கோடி ரூபா) வழங்க வெளிநாடுகள் தயாராக இருப்பதாக 'ராவய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டால் மட்டுமே இவ் உதவிகளை வெளிநாடுகள் செய்ய முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மண்டைதீவுப் பகுதியில் படையினர் தினமும் வீடு வீடாக சோதனை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வீடுகளையும், வீட்டில் இருப்பவர்களையும் படையினர் தினமும் காலை 8 மணிக்கு சென்று சோதனையிடுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரவு வேளைகளில் விடுதலைப்புலிகள் மண்டைதீவுப் பகுதிக்குள் ஊடுருவி இருக்கலாம் எனச் சந்தேகம் கொள்ளும் படையினர் இவ்வாறான சோதனையில் ஈடுபடுவதாக கூறப்படுகின்றது. இத் தேடுதல் வீடு வீடாக இடம் பெறுவதாகவும், வீட்டில் இருக்கும் அனைவரும் சோதனைகளுக்குஇலக்காக்கப்படுவதாகவும் மேலும் கூறப்படுகிறது.

# நிறுத்திவைக்கும் வாகன உதிரிப்பாகங்கள் திருட்டு

கொழும்பு

கோட்டை, புறக்கோட்டை பகுதிகளில் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களிலிருந்து உதிரிப்பாகங்களைத் திருடுவது அண்மைக் காலத்தில் பெருமளவில் அதிகரித்துள்ளது மத்திய பஸ் நிலையத்திற்கும், கோட்டை புகையிரத நிலையத்திற்கும் இடையில் நிறுத்தி வைக்கப்படும் அரச வாகனங்களில் இருந்து உதிரிப்பாகங்களை திருடுவது அதிகரித்து வருகின்றதாம் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களில் இருந்து வானொலி ஏரியல், பக்கக் கண்ணாடிகள் என்பன போன்ற உதிரிப் பாகங்களே பெருமளவில் திருடப்படுவதாகவும் இவை கழற்றி எடுத்துச் செல்ல முடியாத போது அவை முறித்து சேதப்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது.

# காமினியின் இடத்துக்கு காமினி ராஜபக்ச

(கொழும்பு)

பாலத்துறை குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட காமினி திசாநாயக்காவின் பாராளுமன்ற அங்கத்துவ இடத்திற்கு கண்டி தேர்தல் மாவட்டத்திலிருந்து காமினி ராஜபக்ச நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் காலியான வீரசிங்க மல்லிமாராய்ச்சியின் பாராளுமன்ற அங்கத்துவத்துக்கு ஆர். யோகராஜனும் நியமனமாகியுள்ளார்.

# வெளிநாட்டு முதலீடுகள் மேலும் அதிகரிக்கும்

[கொழும்பு]

அண்மைக் காலமாக தேக்க நிலையில் இருந்து வரும் வெளிநாட்டு முதலீடுகள் ஜனாதிபதித் தேர்தலில் திருமதி சந்திரிகாவின் பெருவெற்றியைத் தொடர்ந்து மேலும் அதிகரிக்குமென ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டு உள்ளனர்.

நிதிச் சந்தைகளைப் பொறுத்த வரையில் இது மிகவும் உற்சாகம் அளிக்கும் ஒரு செய்தியாக இருக்குமென ஆசிய பங்கு சந்தைகள் நிறுவனத்தைச் சேர்ந்த நிலான் விஜேசிங்கா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ஜனாதிபதியும்பிரதமரும்ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் அரசியல் உறுதிப்பாடு மேலும் வலுவடையும் எனவும் தெரிவித்தார்.

# முன்னாள் அமைச்சரின் வீட்டில் ஆயுதங்கள்

(கொழும்பு)

ஐ.தே.க. அரசில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சராக இருந்த விஜேபால மெண்டிஸின் வீட்டிலிருந்து பெருமளவு சட்ட விரோத ஆயுதங்கள் பொலிசாரால் கைப்பற்றப் பட்டுள்ளன.

நீர்கொழும்பு பொலிசார் முன்னாள் அமைச்சரின் நீர்கொழும்பு வீட்டில் நடத்திய திடீர் சோதனையில் கண்ணிவெடிகள், கொள்கலன்கள், ஆயுதங்கள், வெடிமருந்துகள் என்பன கைப்பற்றப்பட்டன. இரகசிய தகவல் ஒன்றை தொடர்ந்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இருதானியங்கி துப்பாக்கிகள் இவற்றுள் அடங்கும். இதே வேளை ஐக்கிய தேசியக்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் சிறிமா திசாநாயக்காவின் வீட்டில் இருந்து ரி 56 ரக துப்பாக்கிகளும் ரவைக்கூடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

சிறிமா திசாநாயக்காவின் கண்டி தங்கொல்லே வீட்டில் அனுமதிப் பத்திரம் இல்லாத இத துப்பாக்கிகள் மறைத்து வைத்திருக்கக் காணப்பட்டதாகவும் இது தொடர்பாக வீட்டில் இருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# எட்டுக் கடைகள் குண்டு வீச்சால் தீக்கிரை

[கொழும்பு]

பிபிலைப் பகுதியில் இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட பெற்றோல் குண்டு வீச்சில் எட்டுக் கடைகள் தீக்கிரையாகியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குண்டு வீச்சை மேற்கொண்டவர்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லையென பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# முக்கியபிரமுகர்களின் பாதுகாப்பு புதுமுறை

(கொழும்பு)

ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர்கள் ஆகியோருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் முற்றிலும் புதிய முறையில் அமைக்கப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு ஏற்பாடுகளில் முன்னர் காணப்பட்ட பல குறைபாடுகள், இப்போது நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பத்திரிகையாளர் அத்தாஸ் சர்வதேச விருது பெற்றார்

(கொழும்பு)

சர்வதேச பத்திரிகை சுதந்திரத்திற்கான பரிசு கொழும்பிலிருந்து வெளிவரும் 'சண்டே லீடர்' பத்திரிகையின் இணை ஆசிரியரான இக்பால் அத்தாஸ் என்பவருக்குக் கிடைத்துள்ளது

நியுயார்க் நகரில் கடந்த ஒன்பதாம் திகதியன்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் அமெரிக்க தேசிய வானொலியின் நிருபரான மரியா ஹினோயோசா, சர்வதேச பத்திரிகை சுதந்திரத்திற்கான இப் பரிசை இக்பால் அத்தாசுக்கு வழங்கியுள்ளார்.

கொழும்பில் வெளியிடப்படும் சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் மூலமாக இராணுவம் சந்திக்கும் தோல்விகள் பற்றி பக்கச் சார்பின்றி பத்திரிகையில் எழுதிய தன் மூலம் இராணுவ தளபதி பதவி துறக்கும் நிலைவரை இட்டுச் சென்றமை பற்றியும், மரணப் பயமுறுத்தல்கள், அவரின் குடும்பத்தவர் மீதான இம்சைகள் என்பவற்றை எதிர்நோக்கிய போதும் இக்பால் அத்தாஸ் துணிவுடன் செயற்பட்டமை பற்றியும் மரியா ஹினோயோசா புகழ்ந்து பேசினார்.

இவ் வைபவத்தில் இக்பால் அத்தாசுடன், கியூபாவில் ஜனநாயக சோசலிசத்தை அமைதி வழியில் ஏற்படுத்தப் பாடுபடும், மின் டாமினோ ரெஸ்டானோ, ஹொங்கொங் பத்திரிகையாளர் செலவி, டெய்சிலியூயெட், சி என் என் தொலைக்காட்சி சேவையின் பார்பரா வோல்டர்ஸ், துருக்கியின் சுயாதீன பத்திரிகைத் துறையை சேர்ந்த அலிஸ் நீஸின் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

பத்திரிகையாளர் பாதுகாப்புக் குழு ஒழுங்கு செய்த இவ் வைபவத்தில் வெகுஜனத் தொடர்பு சாதனங்களின் பெரும் புள்ளிகள், தனித்துவம் வாய்ந்த பத்திரிகையாளர்கள் என 950க்கும் அதிகமானோர் சலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது

# நில அளவையாளராவதற்கான பயிற்சி

நில அளவையாளராவதற்கான முன்னோடி நில அளவைப் பயிற்சியை தமிழீழ நில அளவையாளர் ஒருங்கிணைப்புக் கழகம் வழங்கவுள்ளது. இப்பயிற்சியைப்பெற விரும்பும் கீழ்க்காணும் தகுதியுடைய ஆண், பெண் இருபாலாரும் 30-11-94-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

1. கல்வித்தகைமை
   அ) க. பொ. த (உ/த) கணிதம் உட்பட 03 பாடங்களில் சித்தி அல்லது
   ஆ) க. பொ. த (சா/த) கணிதம். விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் விசேடசித்தியுடனான தகுதி
2. வயதெல்லை
   29 வயதிற்குக் குறைந்தோர்
3. பயிற்சிக்காலம்
   06 மாதகால முன்னோடிப் பயிற்சியில் தகுதி காணப்படுபவர்கட்கு தொடர்ந்து உயர்நிலையில 6 மாதப் பயிற்சி வழங்கப்பட்டு வேலைவாய்ப்பளிக்கப்படும்
4. விண்ணப்பதாரர் தமது பூரண சுயவிருப்பத்துடன் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.
5. நேர்காணலுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

பொறுப்பாளர்
(நிலஅளவைப் பிரிவு)
சபாபதி லேன்,
கொக்குவில் கிழக்கு.

தலைவர்
தமிழீழ நில அளவையாளர்
ஒருங்கிணைப்புக்கழகம்
477, கண்டிவீதி அரியாலை
யாழ்ப்பாணம்.

(இ/10725)

# ரணில் தலைமையை அடுத்து கூரே மீண்டும் ஐ. தே. கவில்

(கொழும்பு)

முன்னாள் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரே மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து செயற்பட உள்ளதாக ஐ.தே.க. வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

கடந்த செப்டெம்பரில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி மாநாட்டில் தனது கட்சிப் பதவிகள் அனைத்தையும் இழந்த இவர் அரசியலிலிருந்து ஒதுங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பொழுது ரணில் விக்கிரமசிங்கவிற்கு கட்சியின் தலைமை கிடைத்துள்ளதைத் தொடர்ந்து இவர் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து செயற்படலாம் என நம்பப்படுகிறது.

# ஐ.தே.க.சாதனைகள் மறக்க முடியாதவை

(கொழும்பு)

எந்தக் கட்சி ஆட்சி புரிந்தாலும் ஐக்கிய தேசியக்கட்சியின் சேவைகளை இலங்கை மக்கள் மறந்துவிடமாட்டார்கள் என ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்

ஐக்கிய தேசியக்கட்சி புரிந்த சாதனைகள் எவர்களாலும் அழிக்கப்பட முடியாதவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி ஆட்சிமுறை விரைவில் மாற்றப்படும்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சிமுறையும், தற்போதுள்ள அரசியலமைப்பும் ஒழிக்கப்பட்டுஅடுத்தவருடம்முதல்புதிய அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்படும் இந்த புதிய அரசியலமைப்பு அடுத்த ஆண்டு ஜூலை நடுப்பகுதி முதல் அமுலுக்கு வரும் இவ்வாறு நீதி, மற்றும் அரசியல் யாப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ், கூறியுள்ளார்

அவர் மேலும் கூறுகையில் புதிய அரசியல் யாப்பை அறிமுகப்படுத்துவதற்காக பாராளுமன்றத்தின் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை பலத்தைப்பெறும் வகையில் எதிர்க் கட்சிகளுடன் இணக்கம் காணப்படும் எனவும் தெரிவித்தார் லஞ்சம், ஊழல் என்பவற்றை ஒழிப்பதற்கான சட்டமூலம் அண்மையில் எதிர்க்கட்சியினரின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

# நட்டஈடு வழங்குவதில் பாரபட்சம் இருக்கக் கூடாது

## ஐ.தே.க. கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் இடம்பெற்ற வன்செயல்களின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு பாரபட்சமின்றி நட்டஈடு வழங்க வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழு அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடிய செயற்குழு அவர் தலைவராக தெரிவு செய்யப்பட்டதை ஊர்ஜிதம் செய்து வரவேற்பு தெரிவித்துள்ளது.

# மேசைப்பந்து

யாழ்மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்தும் ஆசிரியர்-மாணவர்களுக்கான மேசைப்பந்து இறுதி நிலைப் போட்டிகள் இன்று காலை 8.30 மணி தொடக்கம் சுண்டிக்குளி வை; எம். சி-ஏ மண்டபத்தில் நடைபெறும்

# ஏழாம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்:

17-04-1972



தாயக மண்ணில்;

17-11-1987

வீரவேங்கை சந்திரபாபு

(சலமோன் நிக்ஸன்)

வீரத்தின் வீரகாவியமாய் மலர்ந்தாயே நிக்ஸன் அன்னியன் படையெடுத்து வந்தபோது மக்களை காக்கவென புலியாகி சந்திரபாபு என்னும் பெயருடன் களத்தில் பாய்ந்தாயே மாதகலில்.இப்போது ஏழாண்டு வந்தகடா ஆனால் உன் நினைவு என்றும் எங்களை விட்டு மாறாது.

இந்திராபுரம்
பளை.

\- குடும்பத்தினர்

(10092)

# வெலிமடையில் அரசாங்கச் சொத்து அரசியல்வாதி ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டது

## டி. பி. மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசுக்கு சொந்தமான காணியொன்றையும், கட்டடம் ஒன்றையும் மிகவும் குறைந்த விலையில் அரசியல்வாதி ஒருவருக்கு விற்றதாக முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வெலிமட நகரின் மத்தியில் அமைந்துள்ள இந்த அரசாங்க சொத்து முன்னாள் அமைச்சர்களில்ஒருவரானரவிந்திர சமரவீரவின் தந்தைக்கு வழங்கப்பட்டுள்ளது; இவர் ஊவா மாகாண முதல்வர் பேர்சி சமரவீரவின் சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வடபகுதி வைத்தியசாலைக்கு உதவ சுவிஸ் அமைப்பு தீர்மானம்

(பேர்ன்)

வடபகுதி வைத்தியசாலைகளின் அடிப்படைத் தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் பூர்த்தி செய்வதென சுவிட்சலாந்தின் சூரிச் நகரில் நடைபெற்ற கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சூரிச் நகரின் ஹித்திரித் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற வடபகுதி வைத்தியசாலைகளின் அபிவிருத்தி சபை கூட்டத்திலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

இக்கூட்டத்தில் உரையாற்றிய இவ் அமைப்பின் தலைவர் கூறுகையில், எமது வாழ்க்கை அர்த்தம் பொதிந்ததாக இருக்க வேண்டுமானால் இன்னல் படும் மக்களுக்கு உதவுவதே முதற் பணியாக இருக்க வேண்டும். இங்கு வாழும் நாம் அனைவரும் ஒன்றுபட்டு சிறு பங்களிப்பையாவது வழங்க வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் மனம்உவந்து அளிக்கும் பங்களிப்பு எம் மக்களின் துயரில் ஒரு பகுதியையாவது போக்க உதவும் எனக் குறிப்பிட்டார்.

# தமிழர்களிடையில் மோதல் சுவிட்சர்லாந்தில அதிகரிப்பு

(பேர்ண்)

சுவிட்சர்லாந்தில் வாழும் தமிழர்களிடையே அண்மைக் காலத்தில் தனிநபர் ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் மோதல் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

விசா புதுப்பித்தல், வதிவிட உரிமை மறுக்கப்பட்டு நாடு கடத்தப்படுதல் போன்ற இக்கட்டான சூழ்நிலை தோன்றியிருக்கும் இக்கட்டத்தில் இத்தகைய மோதல் சம்பவங்கள் அதிகரித்திருப்பதால் இங்குள்ள தமிழர்கள் மத்தியில் கவலை தோன்றியுள்ளது.

# ஐ.தே.க. தலைமை இழுபறி சிறிமா,ரணில் வாக்குவாதம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால தலைமைத்துவம் தொடர்பாக ஜனாதிபதி தேர்தலில் தோல்வியுற்ற திருமதி சிறிமா திசாநாயக்கவிற்கும்,எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையே கடுமையான வாக்குவாதம் நடைபெற்றது.

ஜனாதிபதி தேர்தலின் முடிவுகள் வெளிவரத் தொடங்கும் முன்னரே இம் மோதல் ஆரம்பித்துவிட்டதாககொழும்பிலிருந்து வெளிவரும் சிங்கள இதழொன்று தெரிவித்துள்ளது;

ரணிலின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டு கட்சியில் செயற்படப் போவதில்லை எனத் தெரிவித்த திருமதி சிறிமா, தேர்தல் முடிவுக்கு பின்னர் அரசியலில் இருந்து ஒதுங்கப் போவதாக முடிவு எடுத்து இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இது பற்றி 'ராய்ட்டர்' செய்தியாளருக்கு திருமதி சிறிமா திசாநாயக்கா வழங்கிய பேட்டியை அடுத்தே ரணிலுக்கும், சிறிமாவுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது;

# கிழக்கு தீமோர் மாணவர் போராட்டம் தொடர்கிறது

காவலில் வைக்கப்பட்டிருக்கும் கிழக்குத் தீமோர் கெரில்லாத் தலைவரை விடுவிக்குமாறு இந்தோனேசிய ஜனாதிபதி சுகார்ட்டோவை நிர்ப்பந்திக்குமாறு அமெரிக்கஜனாதிபதி பில் கிளிண்டனை, இந்தோனேசியாவில் அமெரிக்க தூதரகம் முன் ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டுவரும்மாணவர்கள் கோரியுள்ளனர்.

மூன்றாவது நாளாக அவர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர் இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் மாணவர்கள் மீது இந்தோனேசிய அரசாங்கம் நடவடிக்கைகள் எதுவும் எடுக்காது என இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தா வந்து சேர்ந்துள்ள அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டன் உறுதியளித்துளைதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# அங்கோலாவில் யுத்தநிறுத்தம்

அங்கோலா அரசாங்கத்திற்கும் யுனிட்டா கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்பட்டுள்ளது- நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ள இந்த யுத்த நிறுத்தத்திற்கான உடன்பாட்டில் இரு தரப்பினரும் கைச்சாத்து இட்டுள்ளனர்;

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகம்

1929-02-20



விண்ணகம்

1993-11-28

குப்பிளான்

உயர்திரு. சி. சொக்கலிங்கம்

அவர்கள்

(உரிமையாளர்' சாந்தி அரிசி ஆலை, ஆட்காட்டிவெளி - அடம்பன், மன்னார்)

திதி 17. 11 1994

எந்தையே! எவலோரும் போற்ற வாழ்ந்தவரே
எம்மை விட்டு எங்கு சென்றீர்
அன்னையே! அமரவுலகுக்கு அழைத்திரோ
அன்பாய் வாழ்ந்த அவனி வாழ்வை நினைந்து
மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தவரே
விண்ணிலும் குறைவிலா நிறைவு பெற
கற்கரை விநாயகன் கழலடி துதிக்கின்றோம்;
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்;

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

பிள்ளைகள், சகோதரர்
மைத்துனர், மைத்துனி

(10114)

# பலவிதத்தில் பயன் பல விளைவித்த இனிமையான கல்விச் சுற்றுலா அனுபவம்

கல்வி சுற்றல் வெறும் வகுப்பறைச் செயற்பாட்டல. இணைப்பாடவிதானச் செயபாடு, மற்றும் கல்விச் சுற்றுலா போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளாற் பெறப்படும் பட்டறிவுமாகும்.

அந்தவகையில் அண்மையில் நடந்த ஒரு நிகழ்வு பற்றியது இது. யாழ் மண்ணிலிருந்து வன்னி மாவட்டத்திற்கு பள்ளிக்கூடப் பிள்ளைகள் சிலர் மேற்கொண்ட பயணம் மிகப்பயன் நிறைந்ததாகும்.

இந்த வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த கல்வி மேம்பாட்டுப் பேரவையினர், பங்குபற்றிய மாணாக்கர், பெற்றோர், ஆசிரியர்களின் நன்றிக்குரியவர்கள்; பாராட்டுதல்களுக்கு உரியவர்கள்.

வெள்ளி பூத்த வானம்;
பிறைநிலா பிரகாசமாய்...
அமைதியாயிருந்த கடல்,
அதில் ஆறேழு படகுகள்.

பாடல்களுடன் (ஆடல் இன்றி - அமைதியான கடலாயினும், ஆழமான அபாயகரமான கடல் ஆடினாற் பிரயாணம் செய்யும் கலன் நீர் உட்புகுந்து கவிழ்ந்துவிடலாம்) பிள்ளைகள் குதூகலமாக பயணிக்கின்றனர், அவர்களுடன் பொறுப்பாசிரியர்களும்- பெற்றோர்கள் சிலரும்... ஆம்...

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம் பெறவிருந்த வடதமிழீழ மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான தமிழ்மொழி கலைத்திறன் போட்டிகளிலும் எழுச்சி விழாவிலும் பங்கு கொள்கின்ற பாக்கியம் பெற்றவர்களைச்சுமந்து கொண்டு... நூற்றுக்கணக்கான தமிழ் மக்களைக் காவு கொண்ட, கிளாலி நீரேரியினூடாக அவர்கள் பயணம் ஆரம்பித்தது.

கிளாலியைதாண்டிச் செல்ல வேண்டும் என்று கூறியதும் தயங்கிய பலரும்- தமிழ் மீது கொண்ட பற்றால் அத தயக்கங்களை உதறிவிட்டு- தமிழர்க்கேயுரிய வீரத்துடன் புறப்பட்டார்கள்

வழக்கமாக இங்கு படகுப் பயணத்தின் போது, ஒருவர் முகத்தைஒருவர் ஒரு அந்நியத் தன்மையுடன் நெருக்கமாக அமர்ந்து செல்வது வழமை. ஆனால் அன்று பாட்டுடனும், குதூகலத்துடனும் மாணாக்கர் சென்றதும்- போட்டிகள் முடிந்து அதே உணர்வுடன் திரும்பியதும் குறிப்பிடத்தக்க ஓர் அம்சம்.

பாடசாலை மட்டங்களிலும், கோட்ட, வலய, மாவட்ட மட்டங்களிலும் 72 வகையான தமிழ்மொழி கலைத்திறன் போட்டிகள் இடம்பெற்றன. அவற்றில் முதலாமிடம் பெற்ற தேர்ந்தெடுக்கப்பட்ட 33 போட்டிகளுக்கென வரையறுக்கப்பட்டு- மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்து போட்டியாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

மிகப் பெறுமதி வாய்ந்த இப் போட்டிகள் - பெரும் பரபரப்பின்றி-ஆரவாரமின்றி - மிகக் கச்சிதமாக நடாத்தப்பட்டது.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் நடாத்தப்பட்ட இப் போட்டிகளுக்கும் எழுச்சி விழாவிற்குமெனக் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு செயற்குழு தம்மை முன்னிலைப் படுத்தாது- மிக நேர்த்தியாகத் தமது மாவட்டத்திற்குக் கீர்த்தி சேர்க்கும் வகையில் சிறப்பாக திட்டமிட்டு நிகழ்ச்சிகளை நடாத்தியது. திரு. குருகுலராஜா பி.க.ப. இக் குழுவின் செயலாளராக பணிபுரிந்தார்; திருவாளர்கள் யோகானந்தன, பத்மநாதன், தெய்வேந்திரன் போன்றோர் மிகப் பொறுப்புடனும் செயற்பட்டு இவ் விழா சிறப்புற நடைபெற ஒழுங்கமைத்தனர்.

இப்போட்டிகள் பற்றிமேலும் சிறப்பான முறையில் விளம்பரப் படுத்தாமையும், இகனோடிணைந்தஓர் மலர்வெளியிடப்படாதமையும் - இதன் முக்கியத்துவத்தை ஓரளவு குறைத்து விட்டன என்ற ஆதங்கம் போட்டிகளை பார்வையிட்டவன், எழுச்சி விழாவில கலந்துகொண்டவன் என்ற வகையில் எனக்குள் ஏற்பட்டது இவை கவனிக்கப்பட்டிருப்பின் 'காத்திரத் தன்மை' இன்னும் அதிகரித்திருக்கும்.

இனி போட்டிகள், பங்கு கொண்டோர், பரிசில் பெற்ற மாவட்டங்கள் விபரத்திற்கு வருவோம். யாழ் மாவட்டப் போட்டியாளர்களும், பொறுப்பாசிரியர்களும் பெற்றோருமாக 140 பேர் வரையில் கலந்து கொண்டனர் இவர்கள் கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலத்தில் தங்கவைக்கப்பட்டனர். இதே போன்று மன்னார்மாவட்டததினர் 230 பேர் வரையில் கனகபுரம் வித்தியாலயத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்தினர் கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் தங்கவைக்கப்பட்டனர் வவுனியா மாவட்டப்போட்டியாளர்களுக்கும் கனிஷ்ட வித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவர்கள் போட்டியினன்றே வந்தனர். ஏனையோர் முதநாளிரவு வந்து தங்கினர் கிளிநொச்சி மாவட்டப்போட்டியாளர்கள் போட்டிகள் நடைபெற்ற நாட்களில் தமதிருப்பிடங்களிலிருந்து வருகைதந்து பங்குகொண்டனர். இவர்களுக்கான தங்குமிட, உணவு வசதிகள் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்மாவட்டப்போட்டியாளர்கள் 21 நிகழ்ச்சிகளிலும், கிளிநொச்சி மாவட்டப் போட்டியாளர்கள் 26 நிகழ்ச்சிகளிலும்,
முல்லைத்தீவு மாவட்டப்போட்டியாளர்கள் 27 நிகழ்ச்சிகளிலும்.
வவுனியா மாவட்டப் போட்டியாளர்கள் 04 நிகழ்ச்சிகளிலும்,
மன்னார் மவட்டப் போட்டியாளர்கள் 28 நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டனர்.
வவுனியா மாவட்டம் 03 புள்ளிகளையும்
மன்னார் மாவட்டம் 65 புள்ளிகளையும்
முல்லைத்தீவு மாவட்டம் 97 புள்ளிகளையும்
கிளிநொச்சி மாவட்டம் 97 புள்ளிகளையும்
யாழ்ப்பாணம் மாவட்டம் 103 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன

நடைபெற்ற 33 நிகழ்ச்சிகளிலும் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கும் பாடசாலைகளுக்குமான பரிசுகளை விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினர் வழங்கி மாணவர்களுக்கு ஊக்கங் கொடுத்தனர்-

இவற்றில் மாவட்ட மட்டத்திற கூடிய புள்ளிகளைப் பெற்ற பாடசாலைகட்கு வயலின் ஒன்றும், மிருதங்கம் ஒன்றும் சிறப்புப் பரிசில்களாக வழங்குவதற்கு உறுதியளிக்கப்பட்டன-

மன்னார் மாவட்டத்திலிருந்து.
முருங்கன் ம.வி. 24 புள்ளிகளைப் பெற்றும்.
யாழ் மாவட்டத்திலிருந்து அளவெட்டி அருணோதயக் கல்லூரி 19 புள்ளிகளைப் பெற்றும்,
கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து.
கிளிநொச்சி மத்தியக் கல்லூரி 13 புள்ளிகளைப் பெற்றும்,
முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து.
முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம் 12 புள்ளிகளைப் பெற்றும்,

> வடதமிழீழ மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான தமிழ்மொழி கலைத்திறன் போட்டிகளும் எழுச்சி விழாவும் அண்மையில் கிளிநொச்சியில் இடம் பெற்றது. இதில் பங்கு கொண்ட ஒருவரின் அனுபவம் இது.

வவுனியாவிலிருந்து நெடுங்கேணி மகா வித்தியாலயம் 03 புள்ளிகளைப் பெற்றும் மிருதங்கம் வயலின் பெற்றுக் கொள்ளத் தகுதி பெற்றன. பிரிவு 04 ற்குரிய பேச்சுப் போட்டியில் யாழ் மாவட்டத்தின் போட்டியின் போது பளைக்கோட்டத்தைச் சேர்ந்த டெய்சிகிருஷாந்திஏனைய 13 கோட்ட போட்டியாளர்களையும் பின்தள்ளி முதலாவதாக வந்திருந்தார். (பளைக் கோட்டம் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்ததாயினும் மாவட்ட மட்டப் போட்டியில் யாழ்ப்பாணத்தில் பங்கு கொண்டு-வடதமிழீழ மாவட்டப் போட்டியில் - யாழ் மாவட்ட சார்பில் பங்கு கொண்டார்)

வடதமிழீழ மாவட்டப் போட்டியில் டெய்சி கிருஷாந்தியினையும் பின் தள்ளி முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மாணவி செல்வி பெனடிக்ற் மேரிறெஜீனா முதலாமிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

எழுச்சி விழாவின் போது இடம் பெற்ற தேர்ந்த நிகழ்ச்சிகளில் இவரின் பேச்சு இடம் பெற்றது அனைவரையும் இது கவர்ந்ததில் வியப்பொன்றுமில்லை இவரை இது போன்ற பெருவிழாவில் அறிமுகப்படுத்தியதற்காகவும்- இனங்கண்டமைக்காகவும் - கல்வி மேம்பாட்டுப் பேரவை பெருமை கொள்ளலாம்.

வெவ்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்று கலந்து தமது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள ஒரு களமாகவும் இந்த எழுச்சி விழா அமைந்ததுஎழுச்சி விழாவின் போது இடம்பெற்ற ஏனைய நிகழ்ச்சிகள்,

செந்நெறிஇசைக்குழு-பிரிவு 04- அளவெட்டி அருணோதயக் கல்லூரி-யாழ்-மாவட்டம் செந்நெறி இசை தனி - பிரிவு - 03 - முருங்கன் மகா வித்தியாலயம் மன்னார் மாவட்டம்.

நவீன நாடகம் - பிரிவு-04- கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆகிய நிகழ்ச்சிகளுடன் - கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவியின் செந்நெறி நடனமும் சிறப்பு நிகழ்ச்சியாக இடம் பெற்றன.

மாணவர்களின் மொழி வளர்ச்சியை இலக்காகக் கொண்டு அனைத்துப் பாடசாலைகளிலும் இடம் பெற்ற தமிழ்த்தினச் செயற்பாடுகள் - போட்டிகள் வடதமிழீழ மாவட்ட மட்டத்தில் இடம் பெற்றமை வரவேற்கத்தக்கது இதன் மூலம் செந்தமிழின் எண்ணற்ற இலக்கியச் செல்வங்களை அறிந்து கொள்ளவும் - அவற்றிலே பரிச்சயம் கொள்ளவும் வழி சமைப்பதுடன் - அவற்றைப் பேணவும் வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி - அதற்கான உந்து சக்தியையும், திடசங்கற்பத்தையும் அனைத்து மாணாக்கர்களுக்கும் - மக்களுக்கும் அளிக்கின்றது. இது தமிழீழத் தேசிய மட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படுதல் காலத்தின் தேவையாகும். அதற்காக அனைவரும் ஒன்று பட்டு உழைப்பதன் மூலம் மாணாக்கரிடையே துளிர் விடும் பேராற்றலை வெளிக்கொணர்ந்து தமிழன்னையை அலங்கரிக்க முடியும் தமிழ் மொழியிற் புலமையும் மொழிப் பற்றும் மிக்க சமுதாயத்தை இதன் மூலம் உருவாக்குதல் வேண்டும்.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் இளைஞர் முகாம்களை அமைத்து - மாணாக்கர்கள்கலைப் பரிமாற்றம் செய்து கொள்வது - கல்வியில் - பிரிக்கமுடியாத ஒரு கூறாகும். இது நாடுகளுக்கிடையேயானதாகவும் ஊர்களுக்கு - கிராமங்களுக்கு இடையேயான போட்டிகளில் பங்கு கொண்ட மாணாக்கர்கட்குக் கிடைத்த பட்டறிவு - ஏனைய மாணாக்கர்கட்குக் கிடைக்காத ஒரு சுகமான அநுபவமாகும்.

இதனூடாக அவர்களின் பண்பாட்டுப் பார்வை ஒரு விசாலித்த பார்வையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

ஒரே மாவட்டத்தைச் சேர்ந்த வெவ்வேறு பாடசாலை மாணவர்கள் சந்தித்துக் கொள்ளும் ஓர் இளைஞர் முகாமாக அவர்கள் தங்கிய பாடசாலைகள் அமைந்தன; அவர்களைப் பராமரித்த உரிய பாடசாலைகள் அதிபர், ஆசிரியர்கள், மாணவரிடமிருந்து பிரியாவிடை பெற்ற நிகழ்வு - மனதில் அழியாமலிடம் பெற்றது;

மன்னார் மாவட்ட ஆசிரியர்கள், போட்டியாளர்கள் தங்கியிருந்த கனகபுரம் வித்தியாலயத்திலிருந்து - அவர்கள் 23-ஆம் திகதி காலையிலேயே புறப்பட்டனர். புறப்படுமுன் நடந்த ஒன்றுகூடலில் அல்லது தம்மை நன்கு பராமரித்த கனகபுரம் வித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவர்கட்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில்மன்னார்மாவட்ட மாணாக்கரின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. பிரியாவிடை உரைகள் நெஞ்சை நெகிழ வைப்பனவாயமைந்தன; இந்நிகழ்ச்சியில் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு வெ. இளங்குமரன் அவர்களும் சமூகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. நீண்ட நெடுங்காலம் பழகிய உறவினர்களைவிட்டுப்பிரிவது போன்ற பிரிவுத்துயருடன் அவர்கள் கிளிநொச்சி மண்ணிலிருந்து - ஆயத மாவட்டமாகிய தமது சொந்த மாவட்டமான மன்னார் மாவட்டத்திற்குச்சென்றனர்;

கிளாலி நீரேரி கடந்து கிளிநொச்சி சென்றவர்களுக்கும் மன்னார் மாவட்டத்திலிருந்து 'சென்றவர்களுக்கும் மேலதிக போனஸ்' மிகைக் கொடையாக இரணைமடுக்குளம், கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லம் என்பவற்றைப் பார்க்கும் வாய்ப்பினை விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினர் ஏற்படுத்திக் கொடுத்தனர். முன்னர் யாழ்ப்பாண பாடசாலைகளிலிருந்து கல்விச்சுற்றுலா செல்பவர்கள் பார்வையிடும் ஒரு இடமான இரணைமடுக் குளத்தினைப் பார்வையிடும் சந்தர்ப்பத்தினைப் பெற்றுக் கொண்ட யாழ் மன்னார் மாவட்ட கலைத்தூதுவர்கள் மிகுந்த மகிழ்ச்சி கொண்டனர்.

**நீ. செல்வராஜா**

எழுச்சிவிழாவைப் பார்வையிட வந்த யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த கல்வியியாளர்கள் சிலர் - மன்னார், முல்லைத்திவு கூத்துக்களைப் பார்வையிட சந்தர்ப்பம்கிடைக்கவில்லையேயென ஏங்கியதை அவதானிக்க முடிந்தது;

அடுத்துவரும் தமிழீழ மாவட்ட தமிழ்மொழி கலைத்திறன் போட்டிகளின் போது தமது அவா பூர்த்தி செய்யப்படும் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் தம்மைத் தேற்றிக் கொண்டனர்;

மொத்தத்தில் பன்முக பயன் விளைவித்த இனிமையான பயணம் இது.

---

# அரச சார்பற்ற நிறுவனங்கள் சில வடக்கு - கிழக்கின் பெயரில் மோசடி

(யாழ்ப்பாணம்)

வட-கிழக்குப்பகுதியில் செயற்படாத கொழும்பில் உள்ள சில அரச சார்பற்ற நிறுவனங்கள் வட-கிழக்கு நிவாரண உதவிக்கு என வெளிநாடுகளிடம் நிதி திரட்டி வருகின்றது.

நேற்றுமுன்தினம் அரசசார்பற்றநிறுவனங்களின் இணையத்தின் நான்காம்ஆண்டுநிறைவு விழா நடைபெற்றது. இந்த விழா முடிவில் இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளால் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

வட - கிழக்குப் பகுதிகளில் தமது கிளைகளைக் கொண்டிராத அல்லது தமது வேலைத் திட்டங்களை செயற்படுத்தாத சில அரச சார்பற்ற நிறுவனங்கள் வட - கிழக்குப் பகுதியின் நிவாரணததிற்கு என வெளிநாடுகளில் இருந்து நிதி திரட்டி வருகின்றன. இவர்கள் இதற்கு சில புகைப் படங்களையும் பயன்படுத்தி வருகின்றனர் என தெரிவிக்கப் பட்டது.

கொழும்பில் தலைமை அலுவலகத்தைக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கும் குறிப்பிட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் யாழ். மாவட்ட இணையத்தில் அங்கம் வகிப்பது தொடர்பாக அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் வெளிநாட்டு பிரதிநிதிகள் யாழ்ப்பாண இணையத்திடம் கேட்டிருந்தனர். இணையத்தில் அங்கத்துவம் இல்லாததையும் இணையத்தின் பூரண தெளிவான விளக்கத்தைத் தொடர்ந்து குறிப்பிட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் தில்லுமுல்லுகள் கொழும்பில் அம்பலத்திற்கு வந்துள்ளது. இதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்டவர்ள்நிதி திரட்டுவது பாதிப்படைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது. (இ. பா. தி)

## மாநகரசபைக்கு பற்றறி அமைச்சு அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபையிடம் உள்ள வாகனங்களுக்கான ஒரு தொகுதி பற்றறி எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக யாழ் மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன;

தற்சமயம் யாழ் மாநகர சபையின் பாவிப்பில் உள்ள வாகனங்களை இயக்குவதற்கு பற்றறி இல்லாமையால் பெரிதும் சிரமத்தின் மத்தியில் தள்ளியும் இன்னொரு வாகனத்தின் உதவியுடனும் யாழ் மாநகர சபை இயக்கிவருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி பற்றறிகள் எடுத்து வரப்படும் பட்சத்தில் ஓரளவு வாகனங்களின் செயற்பாடுகள் தீவிரமடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

[பா]

## சேவைக்கால பயிற்சி

[யாழ்ப்பாணம்]

க. பொ. த. [உயர் தர] ஆசிரியர்களுக்கான சேவைக் கால பயிற்சியில், வலயம் ஒன்று பாடசாலைகளுக்கான தூயகணிதம், இரசாயனவியல், பௌதிகவியல் பாடங்களின் கருத்தரங்குகள் இன்று நடைபெறவுள்ளன.

தூயகணிதம்- கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும், இரசாயனவியல், பௌதிகவியல்- கோப்பாய் மகாவித்தியாலயத்திலும் சேவைக்காலப் பயிற்சிகள் நடைபெறும்

## பல்கலை.மூதவையிலிருந்து மாணிக்கவாசகர் விலகல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக மூதவையில் இருந்து முன்னாள் யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் உறுப்பினர் பதவியை துறந்துள்ளார்.

இத் தகவலை யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் ஈழநாதத்திற்குதெரிவித்தார்.

இவ் விடயம் சம்பந்தமாக உத்தியோக பூர்வமான கடிதமொன்றை கா. மாணிக்கவாசகர் யாழ். பல்கலைக் கழக பதிவாளர் பரமேஸ்வரனுக்கு அனுப்பிவைத்துள்ளார்;

அக் கடிதத்தில் தமக்கு சுகவீனம் ஏற்பட்டுள்ளதனால் யாழ். பல்கலைக் கழக உறுப்பினர் பதவியை துறப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார் என தெரிய வருகின்றது. (பா)

## வீடுகளைச் சூழவுள்ள கழிவுகளை அகற்ற முயற்சி

கழிவுநீர், மலக்குழி குப்பை கூளங்கள் போன்றவற்றை தனியார்வீடுகள் மற்றும் தாபனங்களில் இருந்து அகற்றுவதற்கு மாநகரசபைநடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கென நவீன கருவி ஒன்றும் தயார்நிலையில்உள்ளதாக யாழ் மாநகர சபை வட்டாரங்கள தெரிவித்தன.

இச்சேவைசிறுகொடுப்பனவு அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுவதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன;

அத்துடன் இந்நவீன முறை மூலம் கழிவுகளை அகற்றுவதற்கு 1000 லீற்றர் கொள்ளவுள்ள தாங்கிஒன்றை யாழ்மாநகரசபை வடிவமைப்புச் செய்துள்ளது. இது பெரிதும் மக்களுக்கு பயனளிக்கக் கூடிய ஒரு நடவடிக்கை என மேலும் தெரிவிக்கப்பட்டது. (பா)

## கால்நடைகளுக்கான தடுப்பூசி

யாழ்குடா நாட்டில் கால்நடை வளர்ப்பை மேம்படுத்தும் வகையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் கால்நடைகளுக்கான தடுப்பூசி போடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் பருவகால மழையுடன் மாடுகளை தாக்கும் தொண்டை அடைப்பான் நோயினை கட்டுப்படுத்த கடந்த செப்ரெம்பர் மாதம் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் உள்ள மாசேரி, தம்பகாமம், மந்துவில் கிழக்கு இடைக்குறிச்சி, முல்லையடி பளை, கிளாலி, அல்லிப்பளை தனங்கிளப்பு, மறவன்புலோ கோயிலிக்கண்டி. நாவற்குழி மேற்கு, கொடிகாமம், வடமராட்சி கிழக்கு ஆகிய இடங்களில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன;

இதில் 1063 மாடுகளுக்கு தொண்டையடைப்பான் நோய்க்கு எதிராக தடுப்பூசியும் 18294 கோழிகளுக்கு கொள்ளை மற்றும் அம்மை நோய்க்கு எதிரான தடுப்பூசியும் போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது;

## நாவன்மை போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் எதிர்வரும் 19-ம் திகதி நடைபெறவிருந்த நாவலர் பெருமான் நாவன்மைப் போட்டி பள்ளி மாணவர்களிடையே எதிர்வரும் ஞாயிறு காலை 9.00 மணி தொடக்கம் நடைபெறும். இவ்வாறு போட்டிச் செயலாளர் திரு. கா. கணேசதாசன் அறிவித்துள்ளார்.

---

**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை - மானிப்பாய்**

(மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம்)

வரியிறுப்பாளருக்கு:

1987ஆம் ஆண்டின் 15-வது இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 41-வது பிரிவின் கீழ் 1995-ம் ஆண்டிற்கான

## ஆதனவரி பற்றிய அறிவித்தல் - 1995

1995ஆம் ஆண்டிற்கான ஆதனவரி கடந்த வருடாந்த மதிப்பீட்டின்படி அறவிடப்படும். தற்போது அமுலிலுள்ள ஆதனவரி அறவீட்டு விகிதமே எதிர்வரும் ஆண்டும் மாற்றமின்றி அமுல் செய்யப்படும்: ஆண்டு முழுவதற்குமுரியவரித்தொகையை ஜனவரி 31ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 10% கழிவும், 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் கந்தாயங்களுக்குரிய கட்டணத்தை முறையே ஜனவரி 31ஆம், ஏப்ரல் 30ஆம், ஜூலை 31ஆம், ஒக்டோபர் 31ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 5% கழிவும் வழங்கப்படும்,

1-ம் கந்தாய வரி மார்ச் 31ஆம் திகதிக்கு முன்பும்,
2-ம் கந்தாய வரி ஜூன் 30ஆம் திகதிக்கு முன்பும்,
3-ம் கந்தாய வரி செப்டெம்பர் 30ஆம் திகதிக்கு முன்பும்,

4-ம் கந்தாய வரி டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்பும் செலுத்தப்படல் வேண்டும். செலுத்தத் தவறும் வரியிறுப்பாளர்கள் மீது குடியிருப்பு ஆதனமாயின 15% மும், வியாபார நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் ஆதனமாயின் 20% மும் பற்றாணைச் செலவாக அறவிடப்படும்.

ஆகவே வரியிறுப்பாளர்கள் நிலுவையின்றி உரிய காலங்களில் பணத்தை செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு பணிவன்புடன்வேண்டப்படுகின்றார்கள்.

மேலும் 1994ஆம் ஆண்டு முடிய மின்சார வரி நிலுவைகளையும், வியாபார உரிமக் கட்டணங்கள் மற்றும் வண்டி, துவிச்சக்கரவண்டி வரி என்பனவற்றையும் நிலுவையின்றி செலுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்;

து. வைத்திலிங்கம்
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய்,
16-11-1994

(சி-10728)

**சிந்தனைக்கு**

ஆற்றில் கணுக்கால் அளவு தண்ணீரிலும் சிந்தித்தான் நடக்க வேண்டும்.

- தமிழ்ப்பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 17-11-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

## எச்சரிக்கை அவசியம் தேவை

இலங்கை அரசியல் விவகாரத்தில் இந்தியாவின் புலனாய்வுத்துறையான 'றோ' அதிக அக்கறை காட்டி வருவதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் ஊர்ஜிதப்படுத்துகின்றன. இந்தவகையில் புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகள், காமினி திசாநாயக்காவின் கொலை தொடர்பான விவகாரங்கள் குறித்தும் மிக அவதானமாகவும், மிக நுணுக்கமாகவும் ''றோ' ஆராய்ந்தும் வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

'றோ'வின் இவ் அக்கறையை காமினி திசாநாயக்கா கொல்லப்பட்டது தொடர்பான தகவல் சில நிமிடங்களிலேயே டில்லியிலுள்ள றோவின் செயலாளருக்கு அனுப்பப்பட்டதில் இருந்து புரிந்து கொள்ள முடியும்; அத்தோடு காமினி கொலை தொடர்பான வீடியோ கசட்டை பலதடவை மீண்டும்மீண்டும் போட்டுப் பார்த்து பல மணித்தியாலங்கள் ஆராய்தலில் இருந்தும் தெரிந்து கொள்ள முடியும்.

ஆனால் இது ஒரு ஆச்சரியமளிக்கும் விடயம் அல்ல. அண்டையில் உள்ள சிறிய நாடுகளின் அரசியலில் புகுந்து விளையாடுவது பெரிய நாடுகளின் புலனாய்வுத்துறைகளின் பொதுப்பண்பாகவே உள்ளது. இந்திய இராணுவம் இலங்கையில் இருந்து அவமானப்பட்டு வெளியேறியபோதும் 'றோ'வின் கவனம் இலங்கையில் இருந்து திரும்பியிருந்தது என்று கூறுவதற்கில்லை. மறுவளமாக தொடர்ந்து இடம் பெற்ற சம்பவங்கள் அதன் கவனத்தை அதிகரித்தது என்றே கொள்ளலாம்.

இதேசமயம் காமினியின் கொலையானது 'றோ'விற்குப் பலத்த இழப்பு என்றே கருதவேண்டியுள்ளது. ஏனெனில் இந்திய அரசுடன் நெருக்கமாக உறவைக் கொண்டிருந்தது போன்றே காமினி திசாநாயக்கா இந்திய புலனாய்வுத் துறையான 'றோவுடனும்' நெருக்கமான தொடர்பையே கொண்டிருந்தார்.

அண்மையில் இடம் பெற்ற காமினி திசாநாயக்காவின் இந்திய விஜயத்தின்போதும் இதனை ஊர்ஜிதப்படுத்தும் சம்பவங்கள் நடந்தே இருந்தன. இப்பயணத்தில் இந்தியப் புலனாய்வுத்துறை அதிகாரிகளுடன் இலங்கை நிலைவரம் பற்றி காமினி திசாநாயக்கா பேசியிருந்தார். இப்பேச்சுக்களில் தமது எதிர்கால அரசியல் திட்டங்கள் குறித்து காமினி தெளிவுபடுத்தியிருந்ததாக அறியவருகிறது. இதேசமயம் இந்தியப் புலனாய்வுத்துறை காமினி திசாநாயக்காவிற்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு போதாதென இந்தியப் பிரதமருக்கு எச்சரித்தனர் இதிலிருந்தே காமினிமீது எவ்வளவு நம்பிக்கையை இந்தியபுலனாய்வுத்துறை கொண்டிருந்தது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

ஆகையினால் சிறிலங்கா - இந்திய சமாதான உடன்பாடு தோல்வியில் முடிவடைந்ததைத் தொடர்ந்து இந்தியப் புலனாய்வுத்துறைக்கு ஏற்பட்ட பெரும் பின்னடைவு காமினியின் கொலை என்று கூறுவதில் தவறு இல்லை. இந்தநிலையில் இலங்கை விவகாரத்தில் இந்தியப் புலனாய்வுத்துறை தனது செயற்பாட்டை முடுக்கிவிடுவதில் ஆச்சரியப்பட எதுவுமே இல்லை.

மேலும் சிறிலங்காவின் புதிய அரசாங்கம் இனப்பிரச்சினைக்குச் சமாதானத்தீர்வொன்றை காண எடுக்கும் முயற்சிகளை இந்தியப் புலனாய்வுத்துறை தமது விருப்பத்திற்கு விரோதமான செயல் என்று கருதக்கூடும். ஏற்கனவே விடுதலைப் புலிகளுடன் முரண்பாட்டைக் கொண்டுள்ள இந்தியப் புலனாய்வுத்துறை தம்முடன் விரோதமுடையவர்களுடன் சிறிலங்கா அரசாங்கம் உடன்பாடு செய்து கொள்வதையோ, அப்பிராந்தியத்தின் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதையோ அதனால் ஏற்றுக்கொள்ள முடியாது போயிருக்கலாம்.

இந்தநிலையில், 'றோ' அமைப்பானது இலங்கையில் நடைபெறும் அரசியல் மாற்றங்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றிப் பார்த்துக் கொண்டும், ஆராய்ந்து கொண்டும் சும்மா இருக்கும் என்று கருதிவிட முடியாது. இவ் விடயங்களில் தன்னாலான முட்டுக்கட்டைகளையும், தடைகளையும் தோற்றுவித்துக் கொண்டே இருக்கும்; தனது நோக்கங்கள், விருப்பங்கள் என்பனவற்றிற்கு இடையூறாக உள்ளவற்றை அகற்றவும், அழிக்கவும் அது முனைப்புடன் செயற்படும்.

இந்தவகையில் இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் முழுமனதுடன் தீர்வு காண விளையுமானால் 'றோ' விடயத்திலும் அது அக்கறை காட்ட வேண்டும். இந்திய அரசாங்கத்துடன் சிறிலங்கா அரசு நல்லுறவு பேணப்பட்டாலும் கூட 'றோ' அதனையும் மீறி, தனது விருப்பத்திற்கு ஏற்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்லலாம் ஒரு நிலையில் இந்தியா சிறிலங்கா நல்லுறவையே பாதிப்படையவும் செய்யலாம். உலகிலுள்ள பிரபலமான புலனாய்வுத்துறைகள் இது போன்ற கைங்கரியங்களைச் செய்துள்ளன

ஆகையினால் சிறிலங்கா அரசு 'றோ' விடயத்தில் கவனமான செயற்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். இல்லாது போனால் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் விருப்பத்தையும் மீறி இனப்பிரச்சினைக்கான சமாதான ரீதியிலான தீர்வையும், அமைதியையும் குழப்பியடித்துவிட அதனால் இயலும்.

# மக்களின் சுமைகள் உடன் தீர்க்கப்பட வேண்டும்

# இதுவே தேசியத் தலைவரின் விருப்பமுமாகும்

**- அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்**

(யாழ்ப்பாணம்)

இன்று சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசு விரும்புமானால் எமது மக்களின் அன்றாடப் பிரச்சினையை, அவசியமான பிரச்சினைகளை முதலில் தீர்க்க வேண்டும். பொருளாதாரத் தடை ஓரளவு தளர்த்தப்பட்டாலும் தளர்த்தப்பட்ட சாமான்கள் கூட மக்களுக்கு போதியளவு வந்து சேரவில்லை. இதை விட குடாநாட்டிற்கான முற்றுகை தளர்க்கப்பட்டு பொருட்கள் போதியளவில் வருவதற்கும் எமது மக்கள் தங்கள் பிரதேசங்களுக்குள்ளேயே சுதந்திரமாக நடமாடக்கூடிய ஒரு பாதையைத் திறந்து விடவேண்டும் இது இன்று சமாதான முயற்சியை முன்னெடுக்க விரும்பும் அரசின் ஆரம்ப நல்லெண்ண நடவடிக்கையாக இருக்கும். ஏனெனில் முதலில் மக்கள் மீது ஏற்படுத்தப்பட்டிருக்கும் நெருக்கடிகள், சுமைகள் குறைக்கப்பட வேண்டும். இதையே எமது தேசியத்தலைவர் விரும்புகின்றார்.

யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று ஆரம்பமான 'அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணல்' என்ற ஆய்வுப்பட்டறையில் சிறப்புரையாற்றும் போது, தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்;

இன்று நாம் எமது தேசத்தில், எமது தாயகத்தின் கட்டுமானப் பணிகளில் எதிர்கால நடவடிக்கைகளிற்கான திட்டமிடல் நிகழ்விற்காக எமது மண்ணிலுள்ள சகல அறிவு சார்ந்த, ஆற்றலுள்ள சேவை மனப்பான்மை கொண்ட பெரியோர்கள் கூடியிருக்கின்றோம். இவ் வாய்வுப் பட்டறை மூலமாக எடுக்கின்ற தீர்மானங்கள் மிகவும் ஆரோக்கியமான, திடகாத்திரமான தீர்மானங்களாகவும் முயற்சிகளாகவும் அமைய நாம் அனைவரும் அயராது உழைக்கவேண்டும். அத்துடன் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் செயல் திட்டங்கள் படிப்படியான எமது வளர்ச்சி திட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் இதற்கமைவாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

எமது போராட்டகாலங்களை எடுத்துப்பார்ப்போமாக இருந்தால் எம் மக்கள் மீது பொருளாதாரத்தடை, போக்குவரத்துத்தடை உலக நாடுகளின் இன்றைய வளர்ச்சிப் போக்கோடு தொடர்புகளற்ற தன்மைகள் போன்ற பல திட்டமிட்ட செயற்பாடுகளை முன்னைய அரசுகள் மேற்கொண்டன; இதனால் எமது மக்கள் அடிபணிந்து விடுவார்கள், அல்லது அழிவு நிலைக்குள்ளாவார்கள் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் எமது மண்ணும் மக்களும் நிமிர்ந்து தான் நின்றார்கள். சவால் விட்டு நின்றார்கள் காரணம் எமது மக்கள்பால் இருந்த அடிபணியாததன்மான உணர்வு, உறுதி மற்றும் எமது தேசத்தின் உயர்ந்த தன்னிறைவை ஏற்படுத்தக் கூடிய வளம் இவையே எம்மை நிமிர்ந்து நிற்கச்செய்தது. இதனாலேயே எதிரி விதித்த பொருண்மிய நெருக்கடிகளுக்கெல்லாம் எமது மண் சவால்விட்டு நின்றது எதிர்த்து நின்றது.

எமது போராட்டத்தின் வளர்ச்சியை நோக்குவோமாக இருந்தால் காலம் காலமாக நாம் எமது உரிமைக்காக எல்லாவழிகளிலும் போராடினோம். பாராளுமன்றத்தில் நின்று. பின்னர் சாத்வீக வழியில் நின்று இப்படிப்பல வழிகளில் நின்று எமது உரிமைக்கான போராட்டத்திற்கு எமது இனம் முனைப்போடு நின்றது. ஆனால் அனைத்துமே மிருகத்தனமாக நசுக்கப்பட்டு எமது இனம் அழிவின் விளிம்பில் நின்று தவித்த நேரத்தில்தான் எமது இனத்தின் விடிவிற்காக எமது மண்ணின் வாழ்விற்காக எம் மத்தியில் உருவானவர்தான் எமது தேசியத் தலைவர். அன்றைய காலகட்டத்தில் எதிரியின் மிருகத்தனமான அடக்கு முறைக்கு எதிராக முனைப்போடு எதிர்க்க வேண்டும் என்று துணிச்சலோடு தனது ஆயுதப்போராட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

ஆரம்பத்தில் ஒரு சிறிய எண்ணிக்கையில் ஆரம்பித்த போராட்டம் காலப்போக்கில் இப் போராட்டத்தினூடு தான் நாம் வாழலாம் என்று சிந்தித்த எமது மக்கள் எமது தேசியத் தலைவரின் பாதையையேற்று நின்று இன்று இந்த உயர்ந்த போராட்ட வளர்ச்சியை அடைந்துள்ளோம். இன்றைய இந்த வளர்ச்சிதான் எமது இனத்தின் பிரச்சினையை உண்மையான யதார்த்த நிலையை உலகு உணரச்செய்துள்ளது

எம்மை அடக்கிஆள அழித்து ஒழிக்க நினைத்தவர்கள் கூட எமது உண்மைகளை யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு எம்மைத்தேடி வருவது எமது தேசியத்தலைவரின் வழிகாட்டலின் எமது மாவீரர்களின் தியாகங்களாலும் எமது மக்களின் உறுதியினாலும் கட்டி வளர்க்கப்பட்ட போராட்ட வளர்ச்சியே. இதை நீங்கள் அனைவரும் தெளிவாக புரிந்திருப்பீர்கள் என நினைக்கிறேன்.

எமது போராட்டம் தீவிரமாக, மிகவும் உறுதியாக முன்னேறி வளர்ச்சியுறும் வேளை எமது தேசத்தின் கட்டுமானப் பணிகளையும் எமது தேசியத் தலைவர் அவர்கள் ஆரம்பித்து வைத்துள்ளார். அதன் அமைப்புகளாகத்தான் இன்று மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்யும் அமைப்புகளாக சட்ட ஒழுங்கை நிலைநாட்டும் நீதித்துறை, காவல்துறை நிர்வாகசேவை, வங்கிக்கட்டமைப்பு. போன்ற சிவில் நிர்வாகக் கட்டமைப்புக்களும் அத்தோடு எமது தேசத்தின் அடித்தளமான பொருண்மிய கட்டமைப்பை வளர்ப்பதற்கான அமைப்புக்களையும் உருவாக்கியுள்ளார் அதன் அமைப்புக்களான பொருண்மியக் கட்டமைப்பு நிர்வாகக் கட்டமைப்பு புனர்வாழ்வுக் கட்டமைப்பும் இணைந்து எமது துறைசார் வல்லுனர்களுடன் கூடி எமது தேசத்தை கட்டியெழுப்பும் மிகவும் முக்கியமான ஓர் ஆரம்ப நிகழ்வாக அமைவது நிச்சயமாக எமது மண்ணில், மக்களின் நிரந்தரவாழ்விற்காக அல்லும் பகலும் அயராது உழைக்கும் எமது தேசியதலைவரின் முன்னெடுப்புக்களுக்கு பக்கத் துணையாக அமையும் அவரின் ஆசியின் வழிகாட்டலுடன் இன்றைய இந் நிகழ்வின் முன்னெடுப்புக்களாக அமைந்துள்ளது.

சமாதான சூழ்நிலை ஒன்று யுத்தமின்றி, அழிவின்றி இங்கு ஏற்படுமாயின் அதை எமது மக்களும் நாமும் மிகவும் வரவேற்போம் குறிப்பாக எமது தேசியத் தலைவர் இதன் வெளிப்பாடாகவே போராட்டம் தீவிரமடையும் காலங்களிலெல்லாம் சமாதான முயற்சிகான நல்லெண்ண சமிக்ஞைகளைக் காட்டி வந்திருக்கின்றார். தொடர்ந்து காட்டி வருகின்றார். இன்று பதவியேற்றிருக்கும் சந்திரிகா அரசிற்கு சிங்கள மக்களின் அங்கீகாரம் கிடைத்திருக்கின்றது அவர் துணிச்சலாக எமது மக்களிற்கான உரிமைகளை வழங்க முன்வரவேண்டும். இச் சூழ்நிலையில் நாம் எமது கடந்தகால வரலாறுகளை நினைவுபடுத்த வேண்டிய சூழ்நிலையிலும் உள்ளோம். அவ் வரலாறுகள் கற்றுத்தந்த பாடங்களுடன் எமது நடவடிக்கைகளை மிகவும் எச்சரிக்கையோடும் அவதானமாகவும் அடியெடுத்து வைக்க வேண்டிய நிலையில் உள்ளோம் எமது கடந்தகால கறைபடிந்த வரலாறுகளே கசப்பான அனுபவங்களே எமது தேசியத்தலைவரை உருவாக்கியது. வரலாற்றை மாற்றியமைத்து தமிழனை தலைநிமிர வைக்க எமது தேசியத்தலைவரின் கீழ் அணிதிரண்டு நாம் எமது உரிமைகளைப் பெறுவதே எமதுஇனம் இங்கே வாழ்வதற்கான இறுதிச் சந்தர்ப்பம் ஆகும்.

# போதனாசிரியர் பிரிவு ரீதியில் விவசாயப்பயிற்சி வகுப்புக்கள்

விவசாய அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்குடன் விவசாய போதனாசிரியர் பிரிவு ரீதியாக விவசாய பயிற்சி வகுப்புக்களை நடாத்த தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், விவசாய திணைக்களமும் இணைந்து நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

அந்தவகையில் நாளை 18ம் திகதி தொல்புரம் பிரிவில் காலை 10.00 மணிக்கு கொட்டிலடி லக்கி சனசமூக நிலையத்திலும், உரும்பிராய் பிரிவில் காலை 10.00 மணிக்கு கோப்பாய் தெற்கு முனிகோயிலடியிலும், 21ம் திகதி உடுவில் பிரிவில் பிற்பகல் 3.00 மணிக்கு இணுவில் கலாஜோதி சனசமூக நிலையத்திலும், 22ம் திகதி சண்டிலிப்பாய் பிரிவில் பிற்பகல் 3.00 மணிக்கு கட்டுடை சைவவித்தியசாலையிலும், சரவெட்டி பிரிவில் காலை 10.00 மணிக்கு மத்தொனி கலைவாணி அறிவாலயத்திலும், 24ம் திகதி புலோலி பிரிவில் பிற்பகல் 3.00 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி பாடசாலையிலும், சாவகச்சேரி பிரிவில் காலை 09.00 மணிக்கு கல்வயல் சனசமூக நிலையத்திலும், 28-ம் திகதி நல்லூர் பிரிவில் காலை 10.00 மணிக்கு பொம்மைவெளி சனசமூக நிலையத்திலும் 29ம் திகதி கீரிமலைப் பிரிவில் காலை 10.00 மணிக்கு கல்லரை பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்திலும், கைதடி பிரிவில் காலை 10.00 மணிக்கு நாவற்குழி கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்திலும், புத்தூர் பிரிவில் காலை 10.00மணிக்கு வாதரவத்தை பாடசாலையிலும் இப்பயிற்சி வகுப்புக்கள் நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாதாந்தம் தொடர்ச்சியாக நடைபெறவிருக்கும் இப்பயிற்சி வகுப்புக்களில் சகல விவசாயிகளையும், கிராமிய உற்பத்திக் குழுக்களையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுப் நிறுவனச் செய்திக் குறிப்பின் மூலம் அறிவித்துள்ளது.

## தாக்கப்பட்டவருக்கான இழப்பீடு வழங்கப் பணிப்பு

(தென்மராட்சி)

இளைஞர்களுக்கு இடையிலான வாக்குவாதம் கைகலப்பில் முடிந்ததில் இருவர் காயமடைந்தனர். இவ்விருவரையும் தாக்கியவர்களுக்கு குற்றப்பணமும் இழப்பீடும் கட்டும்படி சாவகச்சேரி நீதிமன்று தீர்ப்பளித்தது.

மட்டுவில் தெற்குப்பகுதியில் வீதியில் நின்ற இருவருடன் அதே வீதியால் வந்த ஐந்து இளைஞர்கள் இவர்களுடன் வாய்த்தர்க்கம் புரிந்தனராம். இத்தர்க்கம் திடீரென இருபகுதியினருக்கும் இடையில் கைகலப்பில் முடிந்ததில் இருவர் காயம் அடைந்தனர் என காவல்துறையினர் மேற்படி ஐவரையும் மன்றில் முற்படுத்தினர்.

இவ் ஐவரையுங் குற்றவாளிகளாகக்கண்ட மன்று குற்றப் பணமாக ஐவரும் தலா 1000/- ரூபா வீதம் 5000/- ரூபா செலுத்தும்படியும் தவறின் தலா 140 நாட்கள் கட்டாய சமூகசேவை எனவும் அத்தோடு பாதிக்கப்பட்ட இருவருக்கும் ஒவ்வொருவரும் தலா 2000/- ரூபா வீதம் மொத்தமாக 10,000/- கட்டும்படியும் நீதியாளர் திரு. க. சுடர் தீர்ப்பளித்தார்.

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-11-17**

**வியாழன் இரவு**

08.01 - சொல்லுங்கள் பார்க்கலாம்
8.10 - சித்தமருத்துவ குறிப்புகள் - சென்றவார தொடர்ச்சி
08.20 - உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் யாழ் கால்நடை வைத்தியசாலை அத்தியட்சகர் திரு தங்கராஜா அவர்களுடனான செவ்வி
08.30 - செய்திகள்
08.40 - ஏட்டிலிருந்து ''உலக உலா'' என்ற சஞ்சிகையிலிருந்து ''அடிமைகள் நிறுவிய குடியரசின் அவலங்கள்'' எனும் கட்டுரை
08.50 - மலரும் மொட்டுக்கள்
08.00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

**1994.11.18**

**வெள்ளி காலை**

07.02 - மாவீர வணக்கம்
07.15 - மணியாரம்
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - தாயகப் பாடல்கள்
09.00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

## மாவீரர் எழுச்சி வாரத்தின் கூட்டங்கள், சிரமதானங்கள்

[யாழ்ப்பாணம்]

மாவீரர் எழுச்சி வாரத்தின் மூன்றாவது நாளான இன்று யாழ் குடாநாட்டில் வட்ட ரீதியாக கூட்டங்களும் கலை நிகழ்வுகளும் சிரமதான பணிகளும் நடைபெறுகின்றன.

இன்றையதினம் இரவு 7.30க்கு வலிகாம கோட்ட யாழ் வட்டத்தில் ஆறுகால் மடம் சனசமூகநிலையத்திலும் வண்ணார்பண்ணை வள்ளுவன் சனசமூக நிலையத்திலும் கோப்பாய் வட்டத்தில் நீர்வேலி திலீபன் சனசமூக நிலையத்திலும் இருபாலை குத்தனி முகாமிலும் கூட்டங்கள் நடைபெறுகின்றன நல்லூர் வட்டத்தில் திருநெல்வேலி வாழையம்மன் சனசமூக நிலையத்திலும் நல்லூர் கொண்டலடி சனசமூக நிலையத்திலும் சண்டிலிப்பாய் வட்டத்தில் சாவற்காடு மகாத்மா சனசமூக நிலையத்திலும் மானிப்பாய் மாவீரர் முகாமிலும் எழுச்சிவாரக்கூட்டங்கள் இடம்பெறுகின்றன. சங்கானை வட்டத்தில் வட்டுக்கலைநகர் நேருஜி சனசமூக நிலையத்திலும் சித்தன்கேணி நாமகள் சனசமூக நிலையத்திலும் உடுவில் வட்டத்தில் இணுவில் கலாஜோதி சனசமூக நிலையத்திலும் இணுவில் பருத்தியடைப்பு பிள்ளையார் கோவிலடியிலும் உடுவில் தெல்லிப்பளை வட்டத்தில் கலைமகள் சனசமூக நிலையம், மல்லாகம் நீலியம்பனை பிள்ளையார் கோவிலடியிலும் கூட்டங்கள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

தென்மராட்சிக் கோட்டத்தில் பனைவட்டத்தில் புலோப்பளை அரசன் குடியிருப்பு மைதானத்திலும் கொடிகாமம் வட்டத்தில நாவலர் சனசமூக நிலையத்திலும் கைதடி வட்டத்தில் கைதடி மேற்கு சேதுகாவலர் பாடசாலையிலும் கூட்டங்கள் இடம்பெறுகின்றன.

வடமராட்சிக்கோட்டத்தில் இமையாணன் அறிவாலயம் சனசமூகநிலையத்திலும்பருத்தித்துறை வட்டத்தில் அல்வாய் மேற்கு கரும்புலிகள் குடியிருப்பில் நடைபெறவுள்ளன.

தீவகக்கோட்டத்தின் எழுச்சிவார கூட்டம் யாழ்முஸ்லிம் பகுதி ஸ்ரீபன் குடியிருப்பிலும் மயூரன் குடியிருப்பிலும் இன்றைய எழுச்சிவாரகூட்டங்கள் நடைபெறவுள்ளன.

**சிரமதானம்**

வலிகாமக்கோட்டத்தில் யாழ் வட்டத்தில் முலவைச் சத்தி அருள்மாதா சனசமூக நிலையப்பகுதி கழிவுவாய்க்கால் துப்புரவுசெய்தல், தென்மராட்சிகோட்டத்திற்பனை வட்டத்திலுள்ள முகமாலையடி சனசமூகநிலைய பகுதியில் சூழல் துப்புரவு செய்தல் கூகாரம் பேணுதல் தீவகக்கோட்டத்தில் யாழ்ஸ்ரீபன் குடியிருப்பு யாழ் முஸ்லிம் ஏரியா நவாலிகுடியிருப்புகளை துப்புரவு செய்தல் துரவுகளை நிரப்புதல் வடிகால்கள் செப்பனிடப்படவுள்ளன

## கழிப்பறைகள் அமைப்பு

பாடசாலைகளில் சுகாதார வசதிகளை செய்து கொடுக்கும் முயற்சியாக வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் மகா வித்தியாலயம், மாமுனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகியவற்றுக்கு தேசநிர்மாணகள் கழிப்பறை வசதிகளை அமைத்துக் கொடுத்துள்ளனர்

கல்வித் திணைக்கள பிரமாண முலதன ஒதுக்கீட்டு நிதியினைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந் நடவடிக்கையினை விஸ்தரித்து மேலும் பல பாடசாலைகளுக்கு இக் கழிப்பறை வசதிகள் செய்து கொடுப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது;

# பொருளாதார கொள்கைகளை வகுக்க தேசிய அபிவிருத்திசபை அமைப்பு

சிறிலங்காவின் பொருளாதார கொள்கைளை தயாரிப்பதற்கு தேசிய அபிவிருத்தி சபை ஒன்று நியமிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிதி திட்டமிடல் அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வே இச்சபைக்கு தலைமை தாங்குவர் ஒவ்வொரு விடயங்களுக்குமாக எட்டு ஆலோசனைச் சபைகளும் அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலஞ்ச ஆணைக்குழு அடுத்தமாதம் கூடும்

இலஞ்சம் ஊழல் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட ஆணைக்குழு அடுத்த மாதம் தனது பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 15-ந் திகதி தொடக்கம் விசாரணைகள் ஆரம்பமாகுமெனவும், ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் விஜயசுந்தர ஆணைக்குழுவின் தலைவராக பணிபுரிவாரெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரசியல் படுகொலைகள் மற்றும் காணாமல் போனோர் பற்றி ஆராயவும் அடுத்த வாரம் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது.

## கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது

நாளை தமிழீழ நிர்வாக சேவை செயலகத்தில் நடைபெறவிருந்த கூட்டுறவு சங்கங்களின் கல்வி உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் தவிர்க்கமுடியாத காரணத்தால் பின்போடப்பட்டுள்ளதெனவும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தமிழீழ நிர்வாக சேவை பொறுப்பாளர் தெரிவிக்கின்றார்.

# கண்டிமாவட்ட அரசதரப்பு எம்.பியை சுட்டுக் கொல்ல முயற்சி!

## தப்பி ஓடிய முன்னாள் சிப்பாய் கைது

[கொழும்பு]

பொதுஜன ஐக்கிய முன்னணியின் கண்டி மாவட்ட எம். பி. லக்ஷ்மன் கிரியல்லவை கொலை செய்ய முயன்ற முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

கைதான 25 வயது இளைஞர் ஒன்றரை வருடங்களுக்கு முன் இராணுவத்தை விட்டு தப்பியோடி வந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது பற்றி தெரிவிக்கப்படுவதாவது கடந்த செவ்வாயன்று லக்ஷ்மன் கிரியெல்ல வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது கும்பல் ஒன்று சந்திரிகா குமாரதுங்காவை இழிவுபடுத்தும் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டு நின்றதை அவதானித்தார்.

இக் கும்பலை அவர் அங்கிருந்து விரட்டியபின் வீடு போய் சேர்ந்தார். கலைந்து சென்ற இக் கும்பல் இந்த எம். பியின் வீட்டிற்கு அருகில் உள்ள ஐ. தே. க பிரமுகர் ஒருவரின் வீட்டிற்கு சென்றது அங்கிருந்து. அக் கும்பல் டஸ் ஒன்றில் வந்து லக்ஷ்மன் கிரியெல்ல வீடு முன்பாக இறங்கினர். அப்போது கிரியல்ல தனது வீட்டின் மாடியில் நின்றிருந்தார் அப்போது அக் கும்பலில் இருந்த ஓர் இளைஞர் தனது ரி-56 துப்பாக்கியை திடீரென எடுத்து கிரியல்லவை நோக்கி சுட முயன்றபோது துப்பாக்கி இயங்க மறுத்தது இதைத் தொடர்ந்து அக் கும்பல் அங்கிருந்து பஸ்ஸில் தப்பி சென்றுவிட்டது பொலிசார் பின்னர் அந்த ஐ. தே. க பிரமுகர் வீட்டில் சோதனை நடத்திய போது அங்கிருந்து ரி-56 துப்பாக்கி 88 சன்னங்கள் கொண்ட இரு ரவைக்கூடுகள் என்பன கைப்பற்றப்பட்டன இராணுவத்திலிருந்து தப்பியோடியவர் என்று கூறப்பட்ட மேற்படி இளைஞர் பின்னர் பொலிசாரால் கைதானார் இவர் முன்னர் இப்பகுதியில் பல கொள்ளை சம்பவங்களிலும் ஈடுபட்டவர் எனக் கூறப்படுகிறது.

## ஆசிரியருக்குக் கூட இருக்க கதிரை இல்லை

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் இயங்கி வரும் சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயத்தில் போதிய தளபாட வசதி இல்லையென தெரிவிக்கப்படுகின்றது குறிப்பாக கற்பிக்கும் ஆசிரிய ஆசிரியைகளுக்கு ஏற்ற இருக்கைகள் இல்லையென்றும் பெரும்பாலானோர் 'நின்றநிலையிலேயே' பாடம் போதித்து வருவதாகவும், அதிபரிடம் கூட அவரது இருக்கையை தவிர மேலதிகமாக இருக்கை எதுவும் இல்லையென்றும், யாராவது அவரை சந்திக்க வரும் பட்சத்தில் தனதுஇருக்கையை கொடுத்து விட்டு நின்று கொண்டே வந்தவருக்கு பதில் கூறி அனுப்பும் அவலநிலை நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [22]

## பாடசாலை மட்டத்திலான உதைபந்தாட்டப் போட்டி

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று காலை 8-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் 17 வயதுப் பிரிவில் யாழ். மத்திய கல்லூரி எதிர் கனகரட்ணம் ம ம வித்தியாலயம், அத்தியார் இந்து எதிர் மானிப்பாய் இந்து கோப்பாய் கிறிஸ்தவ எதிர் புனித ஹென்றியரசர் கல்லூரி.

இன்று மாலை 2மணிக்கு பல்கலைக்கழக மைதானத்தில் 19 வயது பிரிவு வட்டுக்கோட்டை இந்து எதிர் சிதம்பராக் கல்லூரியும், நெல்லியடி ம ம வித்தியாலய மைதானத்தில் புனித ஹென்றியரசர் எதிர் விக்கினேஸ்வராக் கல்லூரி, புனித சாள்ஸ் எதிர் ஹாட்லிக் கல்லூரியும் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மைதானத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் எதிர் சந்திரபுர ஸ்கந்தவரோதயா யாழ். இந்துவில் 17 வயது பிரிவு அராலி இந்து எதிர் இமையாணன் அ. த. க. பா 15 வயதுபிரிவு புனித ஜோசப் எதிர் தொண்டாவில் இராமகிருஸ்ணாவும் விளையாடும்.

## சிசுவின் சடலம் மீட்பு

(வடமராட்சி)

நாகர்கோயில் பகுதியில் வைத்து ஒரு நாள் சிசு ஒன்றின் சடலம் மீட்கப்பட்டது. இறந்த பின் புதைக்கப்பட்ட இச் சிசுவின் சடலம் மீட்கப்பட்டு பிரேதபரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைஎடுத்து வரப்பட்டு அரசசெலவில் அடக்கம் செய்யப்பட்டது இது பற்றி மேல் விசாரணை நடைபெற்று வருகிறது. (யோ)

மல்லாகம் - கோட்டைக்காடு
சாளம்பை கதிர்வேல் முருகமூர்த்தி ஆலய
புதிய சித்திரத் தேருக்கான

அச்சுக் கோர்ப்பு வைபவ விஞ்ஞாபனம்

எதிர்வரும் 18. 11. 94 வெள்ளிக்கிழமை காலை 8. 00 மணி தொடக்கம் 11. 00 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில் திருநெல்வேலி விநாயகர் சிற்பாலய சிற்பாசாரி திரு. சு இராசரத்தினம் அவர்களால் புதிய சித்திரத் தேருக்கான அச்சுக் கோர்ப்பு வைபவம் மங்களகரமாக நடைபெறும் அடியார்கள் அனைவரையும் மேற்படிவிழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தேர்த் திருப்பணிச் சபை
ஆலய பரிபாலன சபை

(10119)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### தங்கள்

நார். இந்த வழி நடத்தலில் உறுதியாக நின்று, உன்னத இலட்சியத்தை நோக்கி, எதிரியோடு போர் புரிந்து எமது தாயகத்தின் பெரும் பகுதியை மீட்டெடுப்பதற்கு உறுதுணையாக நின்ற எமது வீரர்களை போற்றிப் பணிவது எமது தலையாய கடமையாகும்.

தமிழீழ மாவீரர் நாள் எமது தாய் நாட்டின் தேசிய நாளாகும். இந்நாள் தமிழீழ மக்களினால் போற்றப்படும் புனித நாளாகும்.

இந்நாளை முன்னிட்டு 15-11-1994-ம் நாள் தொடக்கம் 20-11-1994-ம் நாள் வரை மாவீரர் எழுச்சி வாரமாகும். இந் நாட்களில் பாடசாலை மாணவர்கள் மாவீரர் நினைவாக அலங்கரித்தல், சிரமதானங்களில் ஈடுபடல், மரம் நடுதல் போன்ற நிகழ்வுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள்.

21 - 11 - 1994-ம் நாள் காலை 8. 30 மணிக்கு பாடசாலைகளில் தமிழீழ தேசியக் கொடியேற்றலுடன் மாவீரர் வாரம் ஆரம்பமாகும். ஒவ்வொரு நாள் காலையிலும் மலரஞ்சலி செலுத்தி 30 நிமிட நேர மாவீரர் நினைவு நிகழ்வுகளும் நடைபெறும். 27-11-94 ம் நாள் வரையிலான ஏழு நாட்களில் ஒரு நாளில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் தங்கள் பாடசாலைகளில் முழு அளவிலான சிறப்பு நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி செய்வதுடன் கோட்டமட்டத்தில் நடத்தப்படும் நிகழ்விலும் கலந்து கொள்வார்கள்.

தமிழீழ மாவீரர் நாளான 27-11-1994-ம் நாளன்று மாவட்ட மட்டத்தில் நடாத்தப்படும் நிகழ்வில் அனைத்து மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்துகொண்டு எமது விடிவிற்காக தம்மையே ஆகுதியாக்கிய, எமது நெஞ்சமெல்லாம் நிறைந்து வாழுகின்ற தியாகத்தின் சிகரங்களான மாவீரர்களை நினைவில் நிறுத்தி அவர்களின் தியாகங்களை போற்றிடுவோம்.

# தாக்குதல் வேகத்துக்கு ஈடுகொடுத்து படைப்புகள் உருவாகமுடியாதுள்ளது

## ஒலி, ஒளி நாடா வெளியீட்டு விழாவில் புதுவை

(யாழ்ப்பாணம்)

நடப்பது எதுவாக இருந்தாலும் அது போராட்டமாக இருந்தாலும் சரி பேச்சுவார்த்தையாக இருந்தாலும் சரி எந்த நிகழ்வாக இருந்தாலும் சரி அதற்குப்பின்னால் மக்களின் பங்கிருக்கும் மக்களின் பங்களிப்புடனேயே இங்கு எல்லாம் நடைபெறுகின்றன இவ்வாறு 'பிஞ்சுமனம்' 'எல்லைக்கற்கள்' வீடியோ ஒளிப்பட நாடாக்களினதும் 'கடற்கரும்புலிகள்' 'கடலின் மடியில்' ஒலிப்பதிவு நாடாக்களினதும் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு வெளியீட்டுரை நிகழ்த்திய தமிழீழ விடுதலைப்புலிகள் கலை,பண்பாட்டுக்கழகப்பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் திரைப்படத்துறையில் எங்களுக்கு வேர் கிடையாது விழுதுகள் கிடையாது இப்பொழுதுதான் நாங்கள் முளைவிடத் தொடங்கியுள்ளோம் ஆனால் அதுவே பாய்ச்சலாக உள்ளது.

எங்களுடைய போராட்டத்தின் வளர்ச்சிச்சூழலிலே அதன் வேகத்திற்கு ஈடு கொடுத்த நாங்கள் எங்கள் வேகத்தை கூட்டியுள்ளோம் அதன் வெளிப்பாடுதான் நாங்கள் இன்று நான்கு ஒளி, ஒலிப்பதிவு நாடாக்களையும் ஒன்றாக வெளியிட்டுள்ளோம்.

நாங்கள் இன்று இந்த நாடாக்களை வெளியிடத் தவறினால் நாளை வேறொரு ஒளிப்பதிவு நாடாவுக்கான வேலைதொடங்கிவிடும் ஏனென்றால் இந்த ஒலிப்பதிவுஒளிப்பதிவுநாடாக்களை நாங்கள் வெளியிடுவதற்கு முன்னர் ஒரு சம்பவத்தை இட்டு அவர்களுக்கு சமர்ப்பணம் செய்து அல்லது அவர்கள் நினைவுகளை நெஞ்சிலே நிறுத்தி நாங்கள்ஒரு ஒலிப்பதிவுநாடா வைதயாரித்துக் கொண்டிருக்கும் பொழுதே இன்னுமொரு சம்பவம் நடந்து விடுகிறது

கடற்புலிகளின் தளபதி சூசை என்னிடம் அண்மையிலே கடற்கரும்புலியாகி வீரச்சாவெய்திய மேஜர் வித்தியைப் பற்றி இரண்டு பாடல்களைசெய்யுங்கள், என்று கேட்டபோது நான் இயலாது என்று சொன்னேன் ஏனென்றால்நீங்கள்இடிக்கும்வேகத்திற்கு நாங்கள் அடித்துக் கொடுக்க முடியாது என்று சொன்னேன்

எங்களுடைய போராட்டத்தின் உச்சக்கட்ட வேகத்திற்கு எங்களால் ஈடுகொடுத்து செய்ய முடியாது என்பது ஒரு பெரிய உண்மை

இரண்டு நாட்கள் ஐந்து நாட்கள் பத்து நாட்கள் இடைவெளியிலே அவர்கள் பெரிய வெற்றிகரத் தாக்குதல்களை செய்து முடிக்கிறார்கள் எங்களுடைய பிள்ளைகள்' ஆனால் நாங்கள் ஐந்து நாட்களிலோ பத்து நாட்களிலே 'ஒரு ஒலிப் பதிவு நாடாவை தயாரித்து வெளியிட முடியாது. இதனாலேயே அப்படிச் சொன்னேன் என்றார்

இந்த வெளியீட்டு விழா விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக துணைப் பொறுப்பாளர் இ. ம. அன்பரசன் தலைமையில் யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது

மன்னார் தொடர்பக பொறுப்பாளர் க. பத்மநாதன் மங்கள விளக்கேற்றி வைத்தார். இரு நிமிட அமைதி வணக்கத்தை அடுத்த விழா ஆரம்பமானது

''பிஞ்சுமனம்'' ''எல்லைக்கற்கள்'' என்ற இரண்டு வீடியோ திரைப்படங்களும் கடற் கரும்புலிகள், கடலின் மடியில் என்ற இரு பாடல் ஒலிப் திவு நாடாக்களுமே நேற்று வெளியிடப்பட்டன தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் இவற்றை வெளியிட்டுவைக்க தமிழீழ நிதர்சனம் பொறுப்பாளர் தமிழன்பன் நாடாக்களை பெற்றுக்கொண்டார் தொடர்ந்து தமிழ்ச்செல்வன் அவர்களால் கலைஞர்கள் பாராட்டப்பட்டு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்

## நூலகம் திறப்பு

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையின் நூலகத் திறப்பு விழா இன்று இடம்பெறவுள்ளது. பாடசாலை அதிபர் தலைமையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்ச்சியில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் துரைசிங்கம் பிரதம விருந்தினராகவும், உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ற. இருதயநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## ஒன்றுகூடல்

தேசிய கல்வி நிறுவன யாழ் இந்துக் கல்லூரி நிலையப் பட்டப்பின் கல்விடிப்ளோமா இறுதிப் பரீட்சை எடுத்த ஆசிரிய மாணவர்களின் ஒன்றுகூடல் யாழ் இந்துக்கல்லூரியில் கடந்த 13-ம்திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது

## திருவிளக்குப் பூசை

(கொழும்புத்துறை)

உரும்பிராய் அருள்மிகு ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்பாள் ஆலய மாதாந்த திருவிளக்குப் பூசை இன்று பி ப 4-00 மணிக்கு விஷேட அபிஷேகம், ஆராதனை வழிபாட்டுடன் நடைபெறும்.

பூரணைதினமான இன்று சுமங்கலி பூசை, திருவிளக்குப் பூசை வழிபாட்டை அடுத்து அம்பாள் வீதியுலாவருதல் என்பன நடைபெறவிருக்கிறது (24)

## பாடநெறி குறித்து ஆராய குழு

(கொழும்பு)

பல்கலைக்கழக எந்திரவியல் பட்டம், தேசியதொழில்நுட்ப பாடநெறி என்பவற்றுக்கிடையில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் கருத்து வேற்றுமை நிலவுவது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரான பணிப்பு விடுத்துள்ளார்.

இந்த இரண்டு பாடநெறிகளையும் கற்கும் மாணவர்கள் தங்களது தனித்துவத்தை பேணுமாறும், கூடுதலான மாணவர்களை அனுமதிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## இடமாற்றம் பெற விண்ணப்பிக்குக

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் அப்பகுதிகளிலேயே இடமாற்றம் பெற விரும்புவோர் எதிர்வரும் 30-ம் திகதிக்கு முன்னர் தங்களது விண்ணப்பங்களை கல்விக் கோட்டத்திற்கு அனுப்பிவைக்குமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (86)

## கண்டெடுப்பு

(வடமராட்சி)

மோட்டார் சைக்கிளின் 94 ஆம் ஆண்டுக்குரிய வரிப் புத்தகம் ஒன்று அல்வாயில் கண்டெடுக்கப்பட்டு அல்வாய் தெற்கு பாரதி சனசமூக நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் தகுந்த ஆதாரங்களை காட்டி பெற்றுக்கொள்ளலாமென நிலைய நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர். (யோ)

## சிறப்புற நடைபெற்ற ஆய்வுப் பட்டறைநிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நாட்டின் அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங்கண்டு அவற்றை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் ஆய்வுப்பட்டறை நடைபெற்றது.

ஆய்வுப்பட்டறையை அரசியல்துறைதுணைப்பொறுப்பாளர் க கரிகாலன்யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தனர், யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் தலைமை உரையை நிகழ்த்தினார். இதைத் தொடர்ந்து சிறப்புரைகளை தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தமிழர் புனர்வாழ்வு கழகப் பொறுப்பாளர் ரவி தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் டொமினிக் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பணிப்பாளர்வி. செம்பியன். அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய பிரதிநிதி ஆகியோர் நிகழ்த்தினர், இத்துடன் ஆரம்ப வைபவம் நிறைவுற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற முதலாவது அமர்வில் விவசாயம், விலங்கு வேளாண்மை, சூழல், கடல்வளம், கைத்தொழில் ஆகிய வற்றின் துறைசார் நிபுணர்கள் தமது கருத்துரைகளை வழங்கினர்.

இன்று அதன் இரண்டாம் அமர்வில் பொருளாதார உட்கட்டுமானம் என்ற பகுதிகளின் துறைசார் வல்லுனர்கள் கருத்துரை வழங்கவுள்ளனர்- (இ)

### யாழ்

விரைவில் தெரியப்படுத்தவுள்ளது. விடுதலைப் புலிகளுடனான பேச்சுகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளதை ஒட்டி திட்டமிடப்பட்ட அனைத்து தாக்குதல் நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளதாக மூத்த இராணுவ அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

### சமாதான

மேற்கொண்டுள்ள யுத்த நிறுத்தம் குறித்து பாதுகாப்பு அதிகாரிகளுடன் அரசாங்கம் விரிவாக ஆராய்ந்து வருகின்றது என்றும் இது குறித்து இதுவரை ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்

அவர் மேலும் புலிகள் எம்மிடம் இருந்து ஒரு சாதகமான பதிலை எதிர்பார்த்து இந்த யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டிருக்கலாம் என கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போது தெரிவித்தார்

இந்த நிலையில் இது குறித்து விரிவாக ஆராய்ந்த பின்னரே இறுதி முடிவெடுக்கப்படும் என்றும் காமினி திசாநாயக்காவின் கொலை தொடர்பான விசாரணைகள் பற்றிக் குறிப்பிட்ட அவர் விசாரணைகளை மேற்கொள்ள இரு இந்தியர்கள் விரைவில் ஒரிரு வாரங்களில் கொழும்பு வந்து சேர்வார்கள் என வெளிவிவகார அமைச்சுக்கு தகவல் கிடைத்திருப்பதாகவும் தெரிவித்தார்

### பலியானவர்

தாலஹேனாவை சேர்ந்த மேஜர் ராஜபக்ஸ சிறிலங்கா இராணுவத்தின் மூன்றாம் இலகுகாலாட் படைப்பிரிவை சேர்ந்தவராவார், வெற்றிலைக்கேணியில் விடுதலைப் புலிகள் மகளிர் அணியினர் நடத்திய தாக்குதலில் இராணுவ அதிகாரிஉட்பட 5படையினர் கொல்லப்பட்டமை தெரிந்ததே

## சிகிச்சை நிலையங்களில் ஓய்வூதியருக்குமுன்னுரிமை

(யாழ்ப்பாணம்)

அரசதுறை ஓய்வூதியர்களுக்கு வைத்தியசாலைகளில் சிகிச்சையின் போது முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

அரசாங்க சேவையில் இருந்து இளைப்பாறிய அரச ஓய்வூதியர்கள் சிகிச்சைக்காக போதனா வைத்தியசாலைக்கு வரும் வேளைகளில் அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் சிகிச்சை (கிளினிக்) அளிக்கப்படல் வேண்டும் என சுகாதார அமைச்சு அனைத்து போதனா வைத்தியசாலைகளினதும் பணிப்பாளர்களுக்கும் சுற்றறிக்கை மூல கேட்டுள்ளது

சம்பந்தப்பட்ட அரச ஓய்வூதியர்கள் சிகிச்சைக்கு வரும் போது ஓய்வூதிய குறிப்பேடுகளையும் எடுத்து வரும்படி கேட்கப்பட்டுள்ளனர் (05)

### மிதமிஞ்சிய

திங்கினைத் தரும் வாய்ப்புகளும் இதனால் அதிகரிப்பதாகவும் மேற்படி மருத்துவ ஆய்வு மேலும் தெரிவித்துள்ளது.

### புலனாய்வாளரை

வரை வொய்ஸ் ஒப் அமெரிக்க கட்டிட நிர்மாணவேலை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## உதைபந்தாட்டம்

(வடமராட்சி)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை ஊழியர்கள் இணைந்த குழு உடுப்பிட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகத்துடன் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு உடுப்பிட்டி அ. மி. கல்லூரி ஆடுகளத்தில் உதைபந்தாட்டப் போட்டியில் மோதவுள்ளது. (யோ)

## குழாய் கிணறு அமைப்பு

பொது இடங்களில் குடிநீர் பெறுவதை சீர்செய்யும் முகமாக இணுவில் கிழக்கு கலாஜோதி சனசமூக நிலையத்திற்கு குழாய் கிணறு ஒன்றினை தேச நிர்மாணிகள் அமைத்துக்கொடுத்துள்ளனர்.

மரண அறிவித்தல்

திருமதி செல்லையா அம்மா

உடுப்பிட்டியை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி செல்லையா அம்மா 16-11-94 இல் காலமானார், அன்னார் திரு. செல்லையாவின் அன்பு மனைவியும், சிவக்கொழுந்து (பண்டிதரும், பெரிய தம்பிரான் ஆதின கர்த்தரும்), முருகேசு, சிறிஸ்கந்தராசா, சிவலிங்கராசா, காலஞ்சென்ற மல்லிகாதேவி மகேஸ்வரி, செல்லக்கிளி ஆகியோரின் அன்புத் தாயாரும், சசிகலாதேவி, பிரதீபன், ராதிகா, கார்த்திகா, கரிஹரன், சுதாகரன் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 16-11-94 அன்று பி.ப. 2-00 மணிக்கு வல்லை மயானத்தில் நடைபெற்றது, இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
V. S. குமார் / சிவகுமார் (பேறாமகன்)
பெரிய தம்பிரான் கோவில் வீதி.
இமையாணன், உடுப்பிட்டி.
(10118)